





# ஞானச்சுடர்

ஆனி

மலர் 2005




வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை


உ

## குறள் வழி

*நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்*
*அல்லற் படுவ தெவன்*



**பொருள்-** நல்வினையாலுண்டாகும் இன்பங்களை இனியவை என்று விரும்பி நுகர்கின்ற வர்கள் தீவினை விளையும் காலத்து துன்பங்களை அவ்வாறே மனம் மகிழ்ந்து நுகராது மனம் வருந்துவது ஏன்? (379)



## நற்சிந்தனை

### குதம்பாய்-5

மங்கையொரு பாகமாய் மருவும் பெருமானே
எங்கள்குல தெய்வமடி - குதம்பாய்
எங்கள்குல தெய்வமடி

அயனு மரியு மறியாமல் நின்றவன்றன்
தயவு நமக்குண்டடி - குதம்பாய்
தயவு நமக்குண்டடி

அரகர வென்றுதினம் அரற்றுஞ்சிவ னடியவர்க்கு
மரணம்பிறப் பில்லையடி - குதம்பாய்
மரணம்பிறப் பில்லையடி


ஞானச்சுடர்
வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு – 2 சுடர் – 90

2005 ஆனி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| ஆறுமுகம் | க. சிவசங்கரநாதன் | 1 - 3 |
| மனவிருள் அகற்றும் மாயை | கு. சிவபாலராஜா | 4 - 6 |
| கலாநிதி சீ. விநாசித்தம்பி.... | | 7 - 9 |
| ஆலய வழிபாடும் சுயநலமற்ற... | சி. வரதராசா J.P | 10 -13 |
| கந்தன் இனியன் | அ. துரை. அரங்கசாமி | 14 - 16 |
| சிராத்தம் | கி. கலைவதனி B.A | 17 - 19 |
| அட்ட புஷ்பங்கள் | ஆ. கதிரமலைநாதன் | - 20 |
| அருணகிரி சுவாமிகள் அருளிய... | சி. வேலாயுதம் | 21 - 22 |
| கந்தபுராணம் | த. சுகந்தன் | 23 -24 |
| அம்மா! அப்பா! என்றழைத்து... | அ. சுப்பிரமணியம் | 25 - 26 |
| இல்லை என்னாத இயற்பகை... | நா. நல்லதம்பி | 27 - 30 |
| யார் இந்த (ச்) செல்லம்மா? | சச்சிதானந்தா ஆச்சிரமம் | 31 - 33 |
| ஆட்கொண்ட போது | சி. யோகேஸ்வரி | 34 - 35 |
| மானுடத்தை மேன்மைப்.... | வ. குமாரசாமி ஐயர் | 36 - 39 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 40 - 44 |
| நித்திய அன்னப்பணி... | | 45 - 46 |
| வருடாந்த வைகாசிப் பெருவிழா... | | - 47 |
| செய்திக்கொத்து | | - 48 |


அன்பளிப்பு:–

மலர் ஒன்று 30/= ரூபா

வருடச்சந்தா தபால்செலவுடன் 385/=

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இலக்கம்:- 021- 2263406

அச்சுப்பதிப்பு:– சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.

உ

# ஞானச்சுடர்

# வைகாசிமாத வெளியீடு

***வெளியீட்டுரை:-***

பொலிகண்டி கந்தவனசுவாமி ஆலய பிரதமகுரு ச. வைத்தியநாதசர்மா அவர்கள் வைகாசிமாத மலருக்கான வெளியீட்டுரையை வழங்கினார்கள். சந்நிதியான் ஆச்சிரமத்தினரால் பதி ஆகிய கடவுளுக்கும் பசு ஆகிய ஆன்மாவுக்கும் புண்ணியம் செய்கின்ற காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஆன்மீகம் தொடர்பாக பலவகையான புத்தகங்கள் வெளிவந்தாலும் ஞானச்சுடரைப் போன்று சிறப்புக்கள் நிறைந்த புத்தகங்கள் வெளிவருவதில்லை என்றே கூறவேண்டும். புலம் பெயர்ந்து வாழுகின்ற மக்களும் இந்தமலரை வாசித்து பயன் அடைவதைப் பார்க்கும் பொழுது உண்மையில் இதன் சிறப்பை எங்களால் அளவிட்டுக் கூறமுடியாதென்று கூறவேண்டும்.

பல ஆச்சிரமங்கள் பலசேவைகளைச செய்தாலும் சந்நிதியான் ஆச்சிரமம் தனித்துவமான பல பணிகளைச் செய்வதையும் நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது எனக் கூறி எமது மலரை வெளியிட்டுவைத்தார்கள்.

***மதிப்பீட்டுரை:-***

பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா அவர்கள் மலருக்கான மதிப்பீட்டுரையை வழங்கினார்கள். கோப்பாய் சிவம் என்று அழைக்கப்படும் சிவானந்தசர்மா அவர்கள் தனது ஆரம்ப உரையில் ஆச்சிரமத்தின் புனிதமான பணிகளை சொற்களால் அடக்கிவிட முடியாது எனவும் இந்தப்பணிகள் தொடரவேண்டுமெனவும் குறிப்பிட்டார்கள்.

பொதுவாக சமூகத்தில் ஒருவர் ஒன்றைச் செய்யும் பொழுது இவர்களுக்கு இதனால் என்னபயன் என்றே கேட்கின்ற ஒரு மனோபாவம் வந்துள்ளது. அதாவது எதிலும் நன்மையடைகின்ற அல்லது இலாபம் தேடுகின்ற செயற்பாடுகளே நடைபெறுவதை இது எடுத்துக்காட்டுகின்றது. ஆனால் ஆச்சிரமம் எதனையும் எதிர்பாராது தனது பணிகளைச் செய்வது மிகவும் போற்றப்பட வேண்டிய ஒருவிடயமாகும். ஞானச்சுடர் சஞ்சிகை எல்லாவகையான தரப்பினரையும் திருப்திப் படுத்தும் அம்சங்களை உள்ளடக்கி வெளிவருவதை ஞானச்சுடரில் உள்ள கட்டுரை களை ஆதாரமாகக் கொண்டு எடுத்துவிளக்கினார்கள். மாணவர்களும் நன்மை பெறக்கூடிய ஆக்கங்கள் இடம் பெற்றிருப்பதுடன் மாணவர்களுடைய ஆக்கங்களை யும் ஞானச்சுடர் கொண்டிருப்பதையும் குறிப்பிட்டார்கள்.

சுடரில் இடம்பெற்ற ஆக்கங்களை வகை ரீதியாக தொகுத்து தனது மதிப்பீட்டுரையை வழங்கினார்கள்.

உ

# சுடர் தரும் தகவல்

ஆன்மீகச் செயற்பாடு தொடர்பாக கருத்துக்களை வெளியிடுகின்ற பொழுது பசித்திரு, தனித்திரு, விழித்திரு என்ற சொற்பதங்களை பல சந்தர்ப் பங்களில், பலரும் பயன்படுத்துவதை நாம் காணமுடியும்.

இந்த மூன்று சொற்பதங்களிலும் உள்ள கருத்துக்கள் மிகவும் பயனுடைய கருத்துக்களாக அமைந்துள்ளன. மேலும் இந்த மூன்று சொற்பதங்களிலும் கூறப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவது மிகவும் கடினமானது எனவும் கூறமுடியாது. அதேவேளை இந்த மூன்று எண்ணக்கருக்களையும் அவரவர் தமது தகுதிக்கேற்ற வகையிலும் வசதிக்கேற்ற வகையிலும் நெகிழ்ச்சிப் போக்குடன் நடைமுறைப்படுத்த முடியும் என்பதையும் நாம் உணரமுடிகிறது.

இறைவனை வணங்கும்பொழுது உணவைத்தவிர்த்து அல்லது சுருக்கி வழிபடுவதுடன், தனியாக இருந்து அமைதியாக அடக்கமாக வழிபடுதல், இறை வழிபாட்டிற்காக காத்திருந்து பொறுமைபேணி இறைவழிபாடு செய்தல் போன்ற விடயங்கள் எல்லாம் பல கோணங்களில் இந்த மூன்று சொற்பதங்களிலும் பயன்படுத்தப்படுகிறது. அத்துடன் இவ்வாறு செயற்படும் பொழுது இந்த மூன்று சொற்களிலும் உள்ள முதல் எழுத்துக்களை எடுத்து சேர்க்கும்பொழுது "பதவி" என்ற உயர்ந்த ஒரு சொல் உருவாகும் தன்மையையும் நாம் காணமுடியும்.

இரண்டாவதாக கூறப்படும் தனித்திரு என்று குறிப்பிடப்பட்ட விடயம் ஆன்மீக ஈடேற்றத்திற்கு மிகவும் அவசியமானதாகவும் உசிதமானதாகவும் இருப்பதை நாம் காணமுடிகிறது. இறைவனை பல சந்தர்ப்பங்களில் பல்வேறு சூழ்நிலைகளில் வழிபட்டாலும் அமைதியாகவும், அடக்கமாகவும் இருந்து இறைவனை மனதில் உள்வாங்கி அவனுடன் மிக நெருங்கி உள்ளுணர்வுடன் வழிபடுவதற்கான சந்தர்ப்பங்கள் எல்லாம் இந்த தனித்திரு என்ற சொற்பதத்திற்குள் உள்ளடக்கப் பட்டுள்ளன.

அரச குடும்பத்தில் பிறந்து ஓர் இந்துவாக வாழ்ந்து உலகியலில் மனிதனுக்கு உண்டாகும் துன்பங்களை உணர்ந்து "தனித்திரு" தியானம் செய்து ஞானஒளி பெற்றவரே புத்தபெருமான் ஆவார். நாம் ஒவ்வொருவரும் புத்தபெருமானாக மாறா விட்டாலும் தனித்திருந்து ஆன்மீக ஈடேற்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் நிச்சயமாக எம்மை பக்குவப்படுத்திக்கொள்ள முடியும்.

ஆன்ம ஈடேற்றத்திற்கு மட்டுமன்றி அறிவியல் ரீதியாக ஒருவன் உண்மைகளைக் கண்டுபிடித்து இவ்வுலக மக்களை ஈடேற்றுவதற்கும் இந்த "தனித்திரு" என்ற தத்துவமே உதவியாக உள்ளதையும் நாம் காணமுடிகின்றது.

ஆன்மீக ஈடேற்றத்திற்கும், அறிவியல் உண்மைகளைக் கண்டறிவதற்கு மட்டுமன்றி ஒருவன் தன்னை முழுமையாக வழிப்படுத்திச் செல்வதற்கும் இந்த "தனித்திரு" என்ற தத்துவம் உதவியாக அமைந்துள்ளது.

உ

# செல்வச்சந்நிதி முருகன்

முருகாவுனைப் பாடாம
லிருக்க முடியுமா - என்தன்
முதுமைவந்து வாட்டினாலும்
மறக்க முடியுமா - உன்மேல்
உருகாத மனமு முண்டோ
உற்று நினைந்தால் - அதற்கும்
உவமானம் வேறு முண்டோ
உரைக்க வுலகில்
திருவாருஞ் சந்நிதியில்
செல்வமுருகா - உன்தன்
திருக்கோயில் கண்டது மென்
சிந்தை சிறக்குமே - அதிலுன்
பெரிதான வடிவேலை
பிரார்த்தித் தலுமே - பட்ட
பெருந்துயரமெலா மறையப்
பெருமைப் பட்டேனே
திருமாலின மருமகனே
சிவசுப்ரமணியா - இருவர்
தேவியர்கள் புடைசூழ
திருவுலா வரும்
பெருமானே கார்த்திகேயா
பிள்ளைப் பிரானே - உன்னைப்
பேணியடியார் பாடப் பாட
ஆடும் பிரானே
வருவாயென்றில் வுலகெல்லாம்
வந்து குவிந்தே - தங்கள்
மனக்கோயில் நீயிருக்க
வைத்துப் பூசிப்பார்
குருஸ்வாமி சந்நிதியில்
குமார வடிவே - தாவுன்
குரை கழலில் சேர்ந்திருக்கும்
கொள்ளையின்பமே.

முதுபெரும் புலவர்,
கலாபூஷணம்,
*வை. க. சிற்றம்பலவனார்.*

உ

# ஆனிமாத சிறப்புப் பிரதி பெறுவோர் விபரம்

**Dr. T. ஸ்ரீஸ்கந்தராசா**
(லண்டன்)

**Dr. வி. பாலகிருஷ்ணன்**
(முகுந்தன் வைத்தியசாலை, அச்சுவேலி)

**திருமதி கண்மணி கணபதிப்பிள்ளை**
(பத்தமேனி)

**திரு மா. நாகலிங்கம்**
(லக்ஷ்மி வெதுப்பகம், பத்தமேனி)

**செல்வி இ. வல்லிபுரம்**
(ஆசிரியை புனித திரேஷா மகளிர் கல்லூரி, அச்சுவேலி)

**திரு வ. த. இன்பராசா**
(வல்வெட்டி)

**திரு க. கிருபாகரன்**
(சந்தை வீதி, உடுப்பிட்டி)

**திரு க. அரியரத்தினம்**
(கதிர் தொலைத்தொடர்பு நிலையம், வல்வெட்டி)

**அதிபர்**
(அ. த. க. பாடசாலை கம்பர்மலை)

**திரு கு. ரவீந்திரன் ஆசிரியர்**
(யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம்)

**P. சாந்தரூபன் G.S**
(சாருகாந் தொலைத்தொடர்பகம், கெருடாவில் தெற்கு)

**திரு சி. தங்கவேல்**
(நிறுவனர் கேம்பிரிட்ஜ் கல்வி நிறுவனம், நவிண்டில்)

**திரு சி. பஞ்சலிங்கம்**
(ஞானவைரவர் கோவிலடி, உரும்பிராய்)

**திரு N. சங்கரலிங்கம்**
(நிர்வாகி சயன்ஸ் அக்கடமி)

**திரு க. சிவகுமார்**
(மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)

**திருமதி இ. லோகநாதன்**
(இளைப்பாறிய பொதுமுகாமையாளர், மானிப்பாய்)

**திருமதி கோமதி குகதாசன்**
(ஆசிரியை யா/ அத்தியர் இந்துக்கல்லூரி நீர்வேலி)

**திரு[illegible]துணிகாசலம்**
(இளை. கூ. சங்க. ஊழியர், பத்தமேனி)

**திரு இ. ஜெயக்குமார்**
(ஆஸ்பத்திரி வீதி, சங்கானை)

**உரிமையாளர்**
(மூர்த்தி கட்டுமாணப் பணிப்பாளர், கோண்டாவில் கிழக்கு)

**திரு க. விவேகானந்தராசா**
(வட்டு கிழக்கு சித்தங்கேணி)

**திரு த. கணேசமூர்த்தி**
(வங்கி உத்தியோகத்தர் இலங்கைவங்கி, யாழ்ப்பாணம்)

**திரு ரு. ரவீந்திரன்**
(கி. முகாமையாளர் உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்)

**ஐ. கோ. சந்திரசேகரம் J.P**
(மார்ஷல் யா/ பல்கலைக்கழகம்)


**திரு ஸ்ரீ. கணேஸ்வரன்**
(சச்சி மோட்டோர்ஸ் வேக்ஸ், திருநெல்வேலி)

**திரு நா. சுந்தரம்**
(இளைப்பாறிய பிராந்திய நிர்வாக அலுவலர் உரும்பராய்)

**திரு சி. கதிரவேலு**
(சமூக சேவையாளர், கோணாவளை, வசாவிளான்)

**திரு T. பாஸ்கரன்**
(ஸ்ரேசன் ரோட் - கொழும்பு)

**திரு வெங்கடாசலம் திவாகர்**
(தாதி உத்தியோகத்தர், தம்பாலை)



உ

# ஆறுமுகம்

திரு க. சிவசங்கரநாதன் அவர்கள்



உலகப் படைப்பில் பல தத்துவங்கள் மாயையின் விதிவாக அமைந்துள்ளன. அம்மாயை சுத்தமாயை, அசுத்தமாயை, சுத்தாசுத்தமாயை என்று மூன்று வகைப்படும். உயிர்க்குலங்கள் தத்தம் வினைகளுக்கு ஏற்றவகையில் இன்ப, துன்பங்களை நுகர்ந்தும் புண்ணிய, பாவங்களை இயற்றியும் பிரபஞ்சத்தில் உழலுகின்றன. தத்துவங்கள் ஒடுங்கும்போது மாயையும் ஒடுங்கிவிடும் மாயை ஒடுங்குவது வேறு; மாயையின் பிணியிலிருந்து விலகுவது வேறு; மழை நிற்பது வேறு; நாம் குடைபிடித்துக்கொண்டு மழையில் நனையாமல் இருப்பது வேறு; சிவஞானம் பெற்றவர்கள் தம்மளவில் மாயையின் பிணிப்பிலிருந்து விடுபடுகிறார்கள்.

ஆன்ம தத்துவங்கள் அசுத்த மாயையிலிருந்து தோன்றுவன. சுத்தாசுத்தமாயை, அசுத்தமாயை என்னும் இரண்டையும் களைந்து சுத்த சிவமாக நிற்கும் முருகப்பெருமான் அசுத்தமாயையினின்றும் நம்மை ஏறவாங்கி அருள் செய்யும் வலிமை பெற்றவன் என்பதைச் சொல்லவேண்டியதில்லை. அவ்வளவு பெரியவன் உபதேசம் செய்திருக்கின்றான் அவனால் தடைகள் பலவும் நீங்கிவிடும் அப்படியிருக்க இந்த அசுத்தமாயையில் அகப்பட்டு மயங்கலாமா என்று எண்ணுகிறார் அருணகிரியார்.

மகமாயையைக் களைந்திடும் வன்மையை உடைய பிரான் தமது ஈசான முகத்திலிருந்து உபதேசம் செய்தான் என்று பொருள் கொள்வோமாக.

ஆறுமுகங்களின் தத்துவத்தை நூல்கள் பலவாறு கூறுகின்றன. முருகன் ஆறுகுணங்கள் நிரம்பியவன். அவை, ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்பன பகம் எனப்படும். இந்த ஆறுகுணங்களை உடைமையால் பகவான் என்ற பெயர் அமைந்தது. முருகன் இந்த ஆறு இயல்புகளின் விளைவான செயல்களைத் தன் ஆறு திருமுகங்களாற் செய்கிறான். மனிதனுடைய உடம்பில் ஆறு ஆதாரங்கள் இருக்கின்றன. அந்த

காமம் ஒருவனை நரகம் புக வைக்கிறது.

ஆறிலும் இருந்து யோகியர்களுக்குத் துணை செய்கின்றவன் அப்பெருமான். ஆறு ஆதாரங்களிலும் ஆறுமுகனாக இருந்து அதற்கு மேல் உருவம் கரந்த பராபரப் பொருளாக அவன் நிலவு கின்றான்.

நீடார் சடாதரத்தின் மீதே பராபரத்தை
நீ காண் எனா எனச்சொல் அருள்வாயே

என்று திருப்புகழில் அருணகிரி நாதர் இதனைப் புலப்படுத்துகின்றார்.

சக்தியின் முகம் ஒன்றும் சிவபிரான் முகம் ஐந்துமாக ஆறுதிரு முகங்கள் அமைந்தன என்றும் கூறுவர். முருகனிடம் சக்தியின் பகுதியும் சிவபிரானின் பகுதியும் இணைந்து விளங்குகின்றன என்ற கருத்தையே இது புலப்படுத்தும். சிவபிரான் சச்சிதானந்தமயமானவன் அம்பிகை அருள் மயமானவள் என்றும் நிலை பெற்றதாய், ஞானமே உருவமாய், இன்ப வடிவாய் இருப்பதால் சச்சிதானந்தன் என்று சொல்கிறோம். அந்த மூன்றும் அவனுடைய தனித்தன்மையையும் பரம் பொருளென்ற நிலையையும் காட்டுவன. நிலையற்ற வாழ்வும் சிற்றறிவும் துன்ப அனுபவமும் உடைய ஆருயிர் களுக்குச் சச்சிதானந்த உருவான இறைவனோடு ஒன்றுபடும் நிலை கிடைத்தால் அவ்வுயிர்களும் நிலைபெற்றவாழ்வும் முழுஞானமும் இன்பதுன்பங்களுக்கு அப்பாற்பட்ட ஆனந்தமும் பெறுவார்கள் அப்படிப்பெறுவதற்கு அவன் அருள்வேண்டும்.

செல்வன் சிவபெருமான் ஏழை ஆன்மா. செல்வன் ஏழைக்கு அருளைத் தூண்டுவது ஈகைக்குணம் அதுஇல்லா விட்டால் செல்வனிடம் செல்வம் இருக்கும் ஏழையினிடம் வறுமை இருக்கும். அளவிலாச் செல்வனிடம் வறுமை என்றும் சேராது. ஆனால் வறிய வனிடம் உள்ள வறுமை போகச் செல்வம் சேரலாம். அதற்குச் செல்வ னிடம் ஈகைப் பண்பு உண்டாகவேண்டும். சிவபெருமானிடம் உள்ள சச்சிதானந் தத்தை உயிர்கள் பெற அவன் அருள் இடைநின்று கூட்டுவிக்கவேண்டும் அந்த அருளேசக்தி.

பராசக்தியின் அருளும் சிவ பிரானின் சச்சிதானந்தமும் இணைந்த வன் முருகன் அருள் மிகுந்த திருக் கோலம் பூண்டவன் அவன். சமைக் குமிடம் ஒன்றும் உணவு வழங்குமிடம் ஒன்றும் தனித்தனியே இராமல் இரண்டும் ஒருங்கே வாய்ந்தது போல அமைந்த மூர்த்தி முருகன்.

ஐந்துமுகம் பெற்ற இறைவன் வழங்கிய கருணையைப் பின்னும் பெருக வழங்கும் பொருட்டு ஆறு முகத்தோடு தோன்றினான் முருகன். அதனால் அம்முகங்களைக், கருணை கூர்முகங்கள் என்று கச்சியப்பசிவாச் சாரியார் பாடுகிறார். கூர்தல் - உள்ளது சிறத்தல் முன்பு உயிர்களுக்குக் கருணை பாய்ந்தது. ஆறுமுகமூர்த்தி தோன்றிய பின் அது பின்னும் பெருகிப் பாயலாயிற்று.

நம்பிக்கை பூரணமாக இருக்க வேண்டும்.

முருகன் கருணை மிகுதியினாலே பக்தர்களின் பக்தி ஒன்றையே கண்டு பிறபக்குவங்களைப் பாராமல் அருள்செய்ய ஆறுமுகம் படைத்து அவதாரம் செய்திருக்கின்றேன் ஆதலின் நீ எளிதிலே தன் அருளைப் பெறலாம் என்பதை அருணகிரிநாதருக்குப் புலப்படுத்தினான். என யாம் அறிந்தாலும் யாம் இளமையிலிருந்து ஒழுக்கம் பண்பு பேணி, இறைவனுக்குப் பணிந்து பக்தி செய்தால் இறைவன் வேண்டிய நேரம் கைகொடுப்பார் என்பது உண்மை.



வறுமைக்கோட்டிற்குட்பட்ட ஒரு மாணவனுக்கு ஆச்சிரமத்தினால் வழங்கப்பட்ட துவிச்சக்கரவண்டியினை அமெரிக்காவிலிருந்து வருகை புரிந்திருந்த திரு K. பாலசுப்பிரமணியம் அவர்கள் வழங்கும் நிகழ்வில் அன்றைய தினம் சிறப்பு சொற்பொழிவுக்காக வருகைபுரிந்திருந்த திரு ஆறுதிருமுருகனும் மேடையில் அமர்ந்திருப்பதைக் காணலாம்.

யாழ் கன்னாதிட்டி புதிய விஞ்ஞானக்கல்விநிலைய அனுசரனையுடன் 22-06-2005 புதன்கிழமை அருணகிரிநாத சுவாமிகள் விழா மிகவும் சிறப்பானமுறையில் ஆச்சிரமத்தில் நடைபெற்றது.

அளவு கடந்த பற்று மாயை எனப்படும்.

உ

# மனவிருள் அகற்றும் மந்திரம்

திரு கு. சிவபாலராஜா அவர்கள்

தூய்மை என்பது மிகவும் துப்புரவான இடம் என பொருள் கொள்ளின் அதை மேம்படுத்தும் நோக்கில் நம் மக்கள் நீர் கொண்டு கழுவுவர். இறைவன்மேல் நீர் சொரிதல் தூய்மையை புற உலகு மக்களுக்கு உணர்த்தும் ஒரு செயல். இறைவன் எமக்குப் புறத்தூய்மையைப் புகட்டி எமது அகத்தூய்மையை வலியுறுத்து வான் வேண்டி நிற்கின்றான். இவ் வழக்கினை எமது ஆலயங்களில் சிறப்பாகக் காண்கின்றோம். எம்மில் எத்தனை பேர் மனத்தூய்மை உடைய வர்களாக உள்ளோம். மனத்தினை எங்ஙனம் யாம் தூய்மை செய்தல் வேண்டும் என்பது எம்மிடையேயுள்ள ஒரு பெரிய வினா. உள்ளத்தில் கெட்ட எண்ணங்களை உருவாக்குமிடத்து அவற்றின் வெளிப்பாடாக நாம் பொய் பேசவும் கூடும். நமது உள்ளத்து உணர் வுகளை தந்திரமாக மறைக்கவே பொய் பேசுகிறோம். அதாவது மற்றை யோருக்கு தீங்குநேரும் என்பதை உணர்ந்தாலும் மறுகணம் அவற்றினை வார்த்தையால் மறைக்கிறோம். ஏனை யோருக்கு தீங்குநேர இடமில்லையெனின் இவ்வார்த்தைஜாலம் பொருத்தமுடை யதே. தீங்கினை உணர்ந்த பின்னும் வார்த்தைகள் ஒழிவு மறைவின்றி வெளிவர மறுத்தன எனின் அதுவே "பொய்மை" எனப்படுகிறது.

அறம் விரும்பி அடியவரை வரவேற்றலும் உபசரித்தலும் ஆகிய செயல்கள் பெரும் பேற்றினை நமக்களிக்கும், என்பது முழுதுமுண் மையே. ஆயினும் வீணுக்காய் பெருவிருந்தளித்தலிலும் பார்க்க மனத் தூய்மையை மேம்படுத்தி வாழுவதாயின் அறத்தின் பூரண பலன்களை நாம் குறைவற பெறமுடியும்.

"மனத்துட்கண் மாசிலன் ஆயின்
அனைத்து அறன் ஆகுல நீர பிற"

என்பது திருவள்ளுவ நாயனார் வாசகம். இதனை அவர் கருதியது மனமாசு பற்றியதே என்பதை உணர்க. இம் மாசு ஒரு குற்றத்தைக் குறிக்கும் மனமாசு பற்றி எத்துணைக் கூறிடினும் பொய்யுரைத்தலால் வரக்கூடிய மாசு எமது அகத்தூய்மையை அடியோடு சாய்த்துவிடும். ஒரு நாள் பூராக நாம் பொய்யுரைக்காது அடங்கி இருப்போ மாயின் அன்றைக்கே நாம் பூரண அறம் செய்த புண்ணிய சீலர்களாவோம்.

விளக்கு எரிகிறது. வெளிச்சம் பரவி இருள் அகல்கின்றது. புறத்தில் நாம் காணுபவை இவை. அகத்தில் எரியும் விளக்கல்லவோ நமக்கு வேண்டுவது. அதை எப்படிப் பெறமுடியும்? எல்லோ ராலும் இந்த விளக்கினை எரிக்க முடியாது என்னும் உண்மையைக்கூட

முயற்சி இல்லாத மனிதனை பிணம் என்று கூறவேண்டும்.

நாம் விளங்கிக் கொள்வதற்கு சான்றோர்களை நாம் நாடவேண்டுமே அக விளக்கின் மகிமை பற்றிய விளக்கத்தை தெளிவாக அளிக்க வல்லவர் இச் சான்றோரன்றோ அவர்கள் முற்றுமுணர்ந்தவர்கள். ஆனால் அவர்கள் தமது இல் வாழ்வைத் துறக்கவில்லை. உணர்வோடு மட்டுமே நிற்கிறார்கள். அதுவே போதும். உணர்வு என்பது பெரும் ஞானம் அல்லவா? பெரும் பேறும் அதுவே மெய்மை அவர் மனத்தை அலங்கரித்து அகத்தின் இருளை அகற்றி ஒளி பரப்பும் நல்விளக்காக அணையா விளக்காக விளங்குதல் எதனால்? வாய்மை விளக்கே அவ் விளக்காம்.

அடுத்தது யாம் அறிய வேண்டுவது அகவொளி அன்றேல் அகவிருள் அகத்திலுள்ளதை யார் அறிவார்? இது வாயால் வரும் பெரிய செய்தி. அதாவது உண்மைகள் புறப்பட்டு வருகின்றன. இது உண்மை என்பது மெய்யானால் அதற்கு நிகரின்று. நாம் காதால் கேட்ட பொருள் விளக்கமாம் அது. அதுவே செயலில் இறங்கும்போது அச்செயலின் மாண்பு தான் எத்துணை? சான்றோர் அறம் செய்யும் தகுதி பெற்றவர். ஊரில் அவர்களுக்கு ஒரு புகழ் உண்டு. புகழும் பெயரும் அவசியம் வேண்டுமே. அறத்தால் வரும் புகழானது ஒருவனை உயர்வடையச் செய்யும். மறத்தால் வருவன யாவும் வெறும் புற வெற்றியே. ஆனால் அறம் தந்த வெற்றி நிரந்தர வெற்றி, நிரந்தரமான புகழும் உண்டு. இப்புகழ் எல்லோருக்கும் கிடைக்காது இதனாலேயே உள்ளத்தின் ஒளியாகிய வாய்மை என்பது ஓர் ஒப்புயர்வற்ற செயலாகும். இதனை மனமாரச் செய்யின் தவம்மேற்கொள்ளும் முனிவன் நம்மிடம் தோற்றிடுவான். மகாகவி பாரதியாரின் கூற்றுப்படி “நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்” என்னும் வசனம் பொருள் பொதிந்தது. நம் மனத்தோடு பொருந்தி நடக்கும் ஒரே செயல் மனச்சாட்சிதான். மனச் சாட்சிப்படி நடக்கின் பெருங்காட்டில் அமர்ந்து தவம் செய்வதற்கு அது ஒப்பாகி விடுமன்றோ. தவமானது பெரு வலியுடைய செயல். வள்ளுவரின் கூற்றுப்படி “தவம் செய்வார் தம் கருமம் செய்வார்”- என்பதில் உள்ள தம் கருமம் என்பதை விளங்கிக்கொள்வது நம் கடன். உலகில் பிறந்தமை இறைவனை அடையும் வழிமுறை தேடுதல் வேண்டியேயாம். இந்த வழியைத் தவற விடலாமா? இதை அடைவதற்கே தவம் செய்கின்றனர். சிலர் அல்லது பலர் தவ வலியுடையோரே இவ்வாறு தவம் செய்யும் பாக்கியம் பெற்றவர்கள். எனவேதான் நாம் தானமாவது செய்யாது போனால் பலன் ஏது? தானம் செய்தல் அறத்தின்பாற்படுவது. இல்லறத்தான் செய்யத்தக்கது. ஆயினும் தவமும் தானமும் செய்யாது விடினும் நமது மனச்சாட்சியைக் கைவிடாது ஒழுகின் இவ்விரண்டினாலும் பெறக்கூடிய அரிய புண்ணியப்பேறு நமக்குக் கிடைக்காமல் போய்விடுமா? நிச்சயம் கிடைக்கும்.

உலக மக்கள் ஒவ்வொருவருடைய உள்ளங்களிலும் ஒருவன் குடி கொண்டிருக்க முடியுமா? என்ன காரணம்

தத்துவ ஞானிகள் பூஜிப்பதற்கு உரியவர்கள்.

பற்றி அவர்கள் அவரை நினைத்தல் வேண்டும். மெய்மையுடைய இவனை நெஞ்சினில் அமர்த்துவது ஒருவன் பெறும் பெரும்பேறு. அவன் தானாகவே அமர்ந்து விடுவான். ஒருசில பெரியார்களை நம் மனத்திலிருத்தி வைத்துள்ளமை இது கருதியன்றோ. இன்னது செய்யின் இன்னது விளையும் என்பது நமது நெஞ்சிற்குத் தெரியாது போக நியாயம் இல்லைத்தான். அப்படியிருக்கும்போது நமக்குத் தெரிந்தவற்றை தெரியாது என்று கூறுதல் வெறும் சாட்டுப்போக்குத் தான். இந்த நிலையில் நம் உள்ளத்தில் ஒரு உறுத்தும் நிலை தோன்ற வேண்டாமா? அப்படியாயின் நாம் மனிதரல்ல. எமது நெஞ்சுக்கு இவ்வளவு தைரியமா? இது எங்கிருந்து கிடைத்தது? நெஞ்சுதான் மனிதனின் இயக்க சக்தி கொண்ட மாபெரும் இயந்திரம். அதுவும் காற்றைவிட வேகமான இயந்திரம். மற்றையவரை நாம் குற்றவாளி யாக்குதல் சாதாரணமாகச் செய்துவரும் செயலன்றோ. பிறர் குற்றவாளிப்பட்டம் சுமக்காமல் இருப்பதோடு அவரிடம் நன்மை விளையவும் வேண்டும். இதுவே பொது நியதியும் தருமமும் ஆகும். மெய்மையால் இவ்விரண்டும் ஏற்படு மாகில் மட்டுமே அது உண்மை என்று சிறப்பிக்கப்படும். அன்றேல் அது பொய்மையின் பாற்படும். இக்கருத்தினை நாம் மெய்மைக்குரிய இலக்கணமாகவே அங்கீகரிக்க முடியும். நாம் பேசும் பேச்சுக்கள் பிறருக்கு யாதேனும் தீங்கு பயக்குமே என்னும் பயம் நமக்கு ஏற்ப டல் வேண்டும். எத்தனை விடயங்கள் நமக்கு பயத்தைக் கொடுக்கின்றன. ஆனால் இதில்மட்டும் நாம் அபார துணிச்சலோடு செயல்படுகிறோம். யார் யாருக்கு தீங்கு ஏற்பட்டாலும் நமக்கு மட்டுமே நன்மை உண்டானால் போதுமே என்னும் நினைப்போ தெரிய வில்லை. மனித உயிர்கள் மட்டுமே உயிர்கள் என்னும் கருத்தல்ல. மிருகம் பறவைகளும் உயிர்கள்தாம். அறம் நோக்கிய செயல் யாவுமே உயிர்களின் துன்பத்தைப் போக்குதலை நோக்காகக் கொண்டவை. ஆகவே எவ்வுயிர்களும் "வெள்ளை நிறப்பூவுமல்ல வேறெந்த மலருமல்ல, உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது" - இவ்வாறு ஒரு வேண்டுதல் விடுத்தவர் சுவாமி விபுலானந்தர் அவர்கள். உள்ளக்கமலம் என்பது ஒப்புயர்வற்ற தூய்மை நிறைந்த பெரிய பொக்கிஷம்.

*பிழை திருத்தம்*

வைகாசிமாத ஞானச்சுடர் மலரில் சுடர் தரும் தகவல் எனும் பகுதியில் இடம்பெற்ற குறள் திருத்தம்:-

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

தவறுக்கு வருந்துகின்றோம்.

மதுவும் மாதுவும் தீமையின் அடிப்படை.

உ

# கலாநிதி அருட்கவி சீ. விநாசித்தம்பிப்புலவர்
## (M.A,Ph.D)

மனிதனை வையத்துள் வாழ் வாங்கு வாழவைப்பது நமது இந்துமதம். சனாதன நெறியாம் எனக் காலத்தால் வரையறுத்துக் கூறமுடியாத மிகத் தொன்மைமிக்க, நமது இந்துமதம் இன்றுவரைக்கும் பல இன்னல்கள் தாக்குதலுக்கிடையிலும் எதிர் நீச்சலிட்டு வளர்ச்சியும் வளமும் பெற்றுத்திகழ் வதற்குக் காரணம் காலத்துக்குக் காலம் தோன்றி அதனைப் புத்துயிரும் புதுப் பொலிவும் ஊட்டும் மகான்களின் அவதரிப்பே ஆகும். அத்தகைய பெரியோர்கள் வரிசையிலே வைத்தெண்ணத் தக்கவர்தான் இன்று நம்மத்தியில் வாழ்ந்துகொண்டு, அருள் பாலித்துக்கொண்டு இருக்கின்ற அளவையூர்ப் பெரும் புலவர் கலாநிதி அருட்கவி சீ. விநாசித்தம்பிப்புலவர் ஆவர்.

உண்மையான மகான்களைக் காண்பது அரிது. உலகின் உண்மை யான சொத்தாகிய அவர்களின் வாழ்க்கையையும் செய்தியையும் கூட்டல் குறைத்தல் இல்லாமலே சந்ததிக்கு வழங்குவது அதைவிட அரிதாகும். ஆன்மீகத்துறை என்னும் பொழுது அது இன்னும் அரிதாகின்றது. வரையறுத்துக்கூற முடியாத பெரும் புகழ் மிக்கவர் அருட்கவி சீ. விநாசித் தம்பிப்புலவர் அவர்கள் அவர்பற்றிய தெய்வாம்சம் நிரம்பிய அனைத்து விடயங்களையும் நாம் முற்றுமுழுதாக அறிந்து விடமுடியாதுதான். ஆயினும், நமது பட்டறிவின் பாற்பட்டதற்கு அமைய, அவர் பற்றிய அரிய செய்தி களை அறிய விளைவோம்.

நம் ஈழத்திருநாடு ஒப்புயர்வற்ற சிறப்புக்குரியது. அதிலும் வையத் துயர்ந்தது என மகாகவியினாற் சிறப்பிக்கப்படும் யாழ்ப்பாணம் மேன்மை பொருந்தியது. இப்புண்ணிய பூமியிலே அளவில் சிறப்புடைய அளவெட்டிக் கிராமத்திலே முருங்கயற்புலம் என்னும் குறிச்சியிலே வீரசைவ மரபினரான விநாயகர் சீனியர் என்பவரும் அன்னப்பிள்ளை என்பவரும் இறை சிந்தனையுடன் வாழ்ந்து வந்தனர். இவர்கள் இல்வாழ்வின் பயனாகத் தவமணி, இராசம்மா என்னும் இரு பெண் குழந்தைகளினைப் பெற்றெடுத் தனர். அடுத்து ஓர் பெண்பிள்ளை பிறந்து உடனே இறந்துவிட்டது. உறவினர் அன்னப்பிள்ளையைப் "பெட்டை பிள்ளை பெறுபவள்" என்று எள்ளி நகையாடினர். இதனால் மனம் நொந்த அன்னப்பிள்ளை தான் வழிபடும் முருகனிடம் அல்லும் பகலும் "எனக்கு ஓர் ஆண்குழந்தை தரமாட்டாயா?" என்று கூறிக் கண்ணீர்விட்டு இறைஞ்சி நிற்பார்.

அக்காலம் கதிர்காம வேலனது கால்நடை யாத்திரையில் அன்னப் பிள்ளையின் தாயாரும் சென்று வருவார்.

எளிமையைப் பின்தொடர்ந்து மகிழ்ச்சி வருகின்றது.

தாயார் வரும்வரை அன்னப்பிள்ளை விரதம் பூண்டு பூஜை, புண்ணியம் ஆற்றுவார். பின் தாயார் கொண்டுவரும் கதிர்காம வேலனது விபூதி, தீர்த்தம் மாவிளக்கு ஆகிய பிரசாதங்களை அருந்தி நோன்பைப் பூர்த்தி செய்வார். இவ்வாறு இரண்டு வருடங்கள் கழிந்தன. மூன்றாவது வருடம் அப்புண்ணியவதி கர்ப்பவதியானார். தனக்குப் பிறக்க இருப்பது கதிர்காமவேலனே என்று எல்லோருக்கும் நம்பிக்கை பூர்வமாகக் கூறிவந்தார்.

அவர் நம்பிக்கை வீண்போக வில்லை. பல பிறவிகளில் ஆற்றிய தவமனைத்தும் திரண்டு உருவான ஓர் தெய்வீகக் குழந்தையை அன்னப் பிள்ளை அவர்கள் ருத்ரோக்காரி வருடம் ஐப்பசித் திங்கள் பதினெட்டாம் நாள் (3.11.1923) சனிக்கிழமை முற்பகல் பதினொன்று முப்பத்திரண்டு மணியள வில் மகநட்சத்திரத்துடன் கூடிய அபர பக்கத் தசமிதிதியில் அமிர்த சித்தயோகத்தில் பெற்றெடுத்தார்.

அன்னப்பிள்ளை அவர்களின் ஆனந்தத்திற்கு அளவே இல்லை. என் மகன் மாணிக்க கங்கையில் இருந்து வந்தவன் எனக் கூறி ஆனந்தப்பட்டார். இதனால் மாணிக்கம் எனக் குழந்தைக் குப் பெயரிட்டு அழைத்தார். ஆயினும் சீனியர் அவர்கள் தமது தந்தையின் பெயர் வழியாகவே பெயரிட எண்ணிய வராய்ப் பலரின் பெயத்தெரிவின் அடிப்படையில் விநாசித்தம்பி என்னும் ஒப்புயர்வற்ற உயரிய நாமத்தை இட்டு அழைக்கலானார். இறைகடாட்சத்திற் கிடைத்த குழந்தையைக் கண்ணை இமைகாப்பது போல அன்னப்பிள்ளை காத்து வளர்க்கலானார். குழந்தை பிறந்து ஐந்து மாதங்கள் ஆகின. அப்பொழுது தான் அந்த அதிசயம் நடந்தது. சரவணப்பொய்கையில் அவதரித்த கந்தனை எவ்வாறு அம்பிகை அணைத்து, ஞானத்தைநல்கி, ஞானபண்டிதனாக்கினாளோ, அவ்வாறே கதிர்காம வேலனின் அருளால் அவதரித்த இக்குழந்தைக்கும் உலக அன்னையாகிய அம்பிகை அருட் பெருக்கை அளிக்கத் தவற வில்லை.

ஐந்து மாதக் குழந்தையின் தொண்டையில் பெரிய இரணக்கட்டு. தாயாரும் எல்லா வைத்தியரிடமும் கொண்டு சென்றார். பயன் எதுவும் இல்லை. வேதனையால் துடிக்கும் குழந்தையைப் பார்க்கப் பொறுக்காத தாய் இறுதியாக இரண்டு மைல் தொலைவிலுள்ள மருத்துவ விசேடம் நிறைந்தவர் என்று கூறப்படும் வைத்தியரிடம் குழந்தையை எடுத்துச் சென்றார். அவ் வைத்தியரோ இரணக்கட்டைப் பார்த்துவிட்டு இதற்கு நான் மருந்து தரமாட்டேன். கட்டுத் தானாகவே உடையும் ஆனால் உடைந்ததும் குழந்தை இறந்து விடும் என்று கூறிவிட்டார். இச்செய்தியைக் கேட்டுத் தாயுள்ளம் குமுறியது. செய்வதறியாது தவித்தது. கால் சென்ற பாதையிற் பயணமானார் அன்னப் பிள்ளை. ஒரு தாயுள்ளத்தை இன்னொரு தாயுள்ளம் தான் உணரும் என நினைத்தவராய் அளவெட்டி மேற்கிலே சிறு பெண்ணாக வந்து குடியிருந்த மாரியம்மன் என்னும் அற்புத வரலாற்றுச்

சிறப்புமிக்க வெளிவயல் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திற்குக் குழந்தையுடன் விரைந்தார். அம்பாளின் கற்பக்கிரக வாசல்முன் குழந்தையை மடியில் தாங்கிய வண்ணம் தூண் ஒன்றுடன் சாய்ந்தபடி கண்ணீர் விட்டுப் புலம்பி அழுதார். "தாயே இது என் குழந்தை அன்று; இனி உன்குழந்தை உன் விருப்பம் என்னவோ; அதன்படி நீ செய்" என்று கூறி அழுதார்.

அழுது வேண்டிக் கொண்டிருந்த தாய் எவ்வாறு கண் துஞ்சினாரோ தெரியவில்லை. ஒரு வயோதிபக் கிழவி கையிலே பிரம்புடன் அங்கு வந்து ''இவன் என்னுடைய அடியான் இவனுக்கு எதுவித பங்கமுமில்லை. அதோ தெரிகிற முத்தாமணக்கின் விதையைக் கொணர்ந்து முலைப்பாலில் உரைத்துக் கட்டுக்குப் போடு சுகம் வரும்" என்று கூறி மறைந்து விட்டார். கண்விழித்த அன்னப்பிள்ளை அவர்கள் சுற்று முற்றும் பார்வையைச் சுழலவிட்டார். யாரையுமே காண வில்லை. எல்லாம் அம்பாளின் செயலே என எண்ணியவராய்க் கனவிலே கூறியபடி செயலில் இறங்கினார். நேரம் அப்பொழுது நண்பகல் 12 மணியைத் தாண்டிவிட்டது. மருந்து போட்டபின்னர் அக்கொடிய வெயிலிலும் முத்துமாரி அம்மன் வீதியை குழந்தையுடன் சுற்றி வரஎண்ணினார் அன்னப்பிள்ளை.

வரம்புகள் நிறைந்த வயலை வெளி வீதியாகக் கொண்ட ஆலயத் தினைச் சுற்றிவரும் இவரது கவனம் முழுவதும் குழந்தை மீதே இருந்த காரணத்தினால் தெற்குப்புற வீதியில் அமைந்திருந்த வரம்பு ஒன்றில் தடக் குண்டு வீழ்ந்தார். குழந்தை கைதவறி வயலிலே புரண்ட வண்ணம் இருந்தது. ஓடிச் சென்று குழந்தையைத் தூக்கினார். கட்டு உடைந்து இரத்தம் சிறிது கசிந்தது. இதைக் கண்டு பயந்து பதறிய தாய் முத்துமாரியம்மன் ஆலயத்தின் முன் வாசலுக்குக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஓடினார். ஏனம்மா இப்படிக் குழந்தையைக் கஷ்டப்படுத்து கிறாய் குழந்தையைக் காப்பாற்றம்மா காப்பாற்றம்மா என்று கூறியவண்ணம் கதறி அழுதார்.

சிறிது நேரம் சென்றது குழந்தைக்கு இரத்தம் கசிவது நின்று விட்டது. படிப்படியாகக் குழந்தை இயல்பான நிலையை அடைந்தது. இறக்கும் தறுவாயில் இருந்த குழந்தை அரைமணி நேரத்தில் அம்பாளின் அருளால் குணமடைந்தது. இவ்வாறு கதிர்காமவேலனால் கருவாகி, அம்பிகை யால் ஆட்கொள்ளப்பட்ட திருவுடைய குழந்தையே இன்று அல்லல் எனவரும் அன்பர் துயர் நீக்கும் தெய்வீக புருஷர் அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர் ஐயா ஆவார். (தொடரும்...

---

நான் என்ற எண்ணத்தை முற்றிலும் ஒழிப்பதில்
வெற்றிபெற்றாலன்றி, இலட்சிய நிலையை அடைவது அசாத்தியமாகும்.

*-மகாத்மா காந்தி-*

பொறுமை கசப்பானதுதான்.

உ

# ஆலய வழிபாடும் சுயநலமற்ற சமய சமூகத் தொண்டுகளும்

சிவஞானச் செல்வர் சி. சி. வரதராசா J.P. அவர்கள்

"**கோ**யில் இல்லாத ஊரிலே குடியிருக்க வேண்டாம்", "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பது முதுமொழி. இறைவன் ஒருவன். அவன் பல ரூபத்தில் எங்கும் வியாபித்திருக்கின்றான். அவன் எல்லா உயிர்களிடத்தும் அன்பு கொண்டவன். எம் உடம்பில் இறைவன் ஒன்றாகக் கலந்து நிற்பவன். எமக்கு முன் எத்தனையோ, சித்தர்களும், ஞானியரும் தோன்றிப் பல அற்புதங்களைச் செய்தும், பல உண்மைகளை எடுத்துரைத்தும் எம்மை உண்மையான நல்வழி செல்ல வழிகாட்டியுள்ளனர். இக்காலத்திலும் பல ஞானிகளும், சிவநெறிச் செம்மல்களும் நம் மத்தியில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் யாவரும் அன்பு - இரக்கம் என்ற சொல்லுக்கு பெருமதிப்பளித்துள்ளனர். "அன்பே சிவம்" - "அன்பே கடவுள்" என்ற உண்மையை நன்கு அறிந்து உள்ளன்போடு தொண்டு செய்து புனிதமாக தெய்வீகத்துடன் செயல்பட்டவர்கள்.

மக்கள் உடல் வளர்ச்சிக்கு உணவு இன்றியமையாததாகும். அது போல் மக்களின் ஆன்ம ஈடேற்றத்திற்கு ஆலய வழிபாடு இன்றியமையாததாகும். 'ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதிவடிவான எமது இறைவனை நாம் உள்ளன்போடு வணங்க உகந்த இடமே ஆலயம் ஆகும். "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பது முதுமொழி. நாம் விரும்பிய நன்மைகளை எல்லாம் இனிது அடையவேண்டுமெனில் ஆலயங்களிற்கு ஒழுங்காகச் செல்லவேண்டும். நாம் மனதினை ஒரு வழிப்படுத்திக் கடவுளை உள்ளன்போடு புனிதமாக நினைத்து தியானிக்க வேண்டும். ஆலயத்தில் நாம் தவறாது கடவுளின் நாமத்தை உச்சரித்தும், பஜனை - கூட்டுப் பிரார்த்தனைகள் பாடியும் புனிதமாக வழிபாடு செய்ய வேண்டும்.

இராமகிருஷ்ணரின் முக்கியத் துவம் வாய்ந்த உபதேசத்தில் தொண்டின் சிறப்புகள் விரிவாகக் கூறப் படுகின்றன. உண்மையில் நாம் "ஆலய வழிபாடும், சமய, சமூகத்தொண்டுகளும், இறையருள் சுரக்கும் சுயநலமற்ற புனிதமான சகல தொண்டுகளையும் நாம் புனிதமாகவும், உள்ளன்போடும், இறைபக்தியுடனும் செய்து வந்தால் எமக்கு உண்மையான இறை அருள் கிடைத்தே ஆகும்.

நம் உள்ளத்தில் சத்தியத்தோடு சுயநலமற்ற தொண்டும் ஒன்று சேருமானால் மனம் விரைவில் தூய்மை

அடைந்து உயர்ந்த ஆன்மீக நிலையை அடைகிறது. எங்கும் பரவியுள்ள காற்றுத்தான் நுரையீரல்களுக்குள்ளும் இருக்கிறது. காற்றை, இது என்னுடையகாற்று என்று சொல்லிக் கொள்ள முடியுமா? அது போலவே எல்லா இடத்திலும் ஒரே இறைவன் தான் பரவி இருக்கிறார்.

நாம் ஆலயத்தில் அர்ச்சனை செய்து வீபூதி, பிரசாதம் முதலிய வற்றை வாங்கிக்கொண்டு வீடு செல்வது தான் ஆலய வழிபாடாகக் கருதக் கூடாது. "எல்லோரும் வாழ்க இன்பமே சூழ்க" என்று ஆலயக் கூட்டு வழிபாடுகளில் படிப்பது போல் "மக்கள் தொண்டே மகேஸ்வரன் தொண்டு" என நினைந்து நாம் அனைவரும் ஆலய, சமய, சமூகத் தொண்டுகளிலும் உள்ளன்போடு ஈடுபடவேண்டும். நாம் பொதுப்பணி, மற்றவர்களுக்குத் தொண்டு செய்யக் கிடைக்கும் சந்தர்ப்பங்களை நன்கு பயன்படுத்தித் திறம்படச் செயற்பட முன் வரவேண்டும். "அன்பே சிவம்" என்பதை நாம் மனதார நன்கு உணர வேண்டும். ஒருவன் அன்பை உணர்ந்து விட்டால் எல்லாம் உணர்ந்தவனாகிறான். 'அ' என்பது தமிழுக்கே முதல் எழுத்து 'ன்' என்பது வரிவடிவில் கடைசி எழுத்து 'பு' என்பது நடு எழுத்தாகும். முன்னாகிப் பின்னாகி நடுவாகி எங்கும் பரந்துள்ளது. அன்பு என்னும் சொல் முந்தியமுதல் நடு இறுதியுமானாய் என்பதை நினைவூட்டு கின்றது. இறைவன் அன்பு வடிவ மானவன்.

அன்பு பெற்றெடுத்த குழந்தையே அருளாகும். தன்னைப்போல் மற்றவர் களையும் நினைக்கத் தூண்டுவதுதான் உண்மையான அன்பாகும். ஆதலால், நாம் அனைவருடனும் அன்புடன் பழக முன்வரவேண்டும். உண்மையில் கஷ்டப் படுகிறவர்களைப்பார்த்தால், நமது மனம் இரங்கவேண்டும். உங்களிடம் இருப்பதை அவர்களுடன் மனமுவந்து பகிர்ந்து கொள்ள வேண்டும். பகிர்ந்து கொள்ள வேண்டுமென்றால் பணத்தை மட்டும் அல்ல, நாம் பெற்ற கல்வி, நம்முடைய அனுபவங்கள், எமது உள்ளத்தால் உள்ளன்புடன் செய்யும் சகல தொண்டுகள், நற்பணிகள் என்பன வற்றை இயன்றவரையில் நம் சக்திக் கேற்ப மற்றவர்களுக்கு கொடுக்க முன் வரவேண்டும்.

இறைவன் படைத்த எல்லா உயிர் களையும் ஒன்றெனக்கண்டு ஆலய, சமய, சமூகப்பணியாற்ற அத்திவார மானது அன்பே. இதனையே சுப்பிர மணிய பாரதியார்.

"அன்பென்று கொட்டு முரசே மக்கள்
அத்தனை பேரும் நிகராம்"

என்றார். தமிழ்ப்பாட்டி ஔவையார்.

"ஈசன் எனக்கருதி எல்லா உயிர்களையும் நேசத்தால்
நினைந்து கொள்" என்றார். இன்றைய நமது கவிஞன்.

"கருணை நிறைந்த உள்ளம்
கடவுள் வாழும் இல்லம்" என்றான்.

தியானம் என்பது ஆத்ம நிஷ்டையே.

ஆகவே இறைவனிடம் சென்று எனக்கென்று வரம் வேண்டாமல் "இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க" வென்று நாம் மனதார வேண்டுதல் வேண்டும். இப்படி இறைவனிடம் வேண்டினால் அருள் கிடைக்குமென்பது தவறு, இறைவனுக்கு மனதாரத் தொண்டு செய்து, இறைவனுடைய அன்பர்களிடத்து அன்புகொண்டு அவர்களுக்கு எம்மாலான நற்சேவை களை உள்ளன்போடு செய்தால், இறைவன் எம்மை ஆட்கொண்டு அருள் சுரப்பான். தன்னலம் கருதாத புனிதமான சேவை எல்லோரும் இன்பமுற்று வாழ வேண்டுமென்ற மனப்பாங்கு எவரிடம் குடிகொள்ளுமோ அவனையே இறைவன் தன்னிடம் அழைத்து விடுகின்றான்.

எனவே அன்பு, அருள், சகிப்புத்தன்மை, கருணை, பொறுமை, பணிவு நிறைந்த உள்ளத்துடன் ஆலய, சமய- சமூகத்தொண்டாற்ற விரும்பாத சுயநலக்காரர்கள் ஆலயம் சென்று வணங்குவதால் எதுவித பயனில்லை. பஞ்சபூதங்களான எம்மிடம் இறைவன் குடிகொண்டிருக்கின்றான்.

கடவுளுக்கு சாதி இல்லை உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்று வேற்றுமை இல்லை. அன்புள்ளம் கொண்டு நல்ல புனிதமான மனதுடன் தொண்டாற்றியோர் அனைவரையும் "ஒன்றே குலம்" என மதித்து அருள் புரிந்தவர். திருவிளையாடற் புராணத்தில் இதற்குச் சான்றுகள் உண்டு. சமய வழி நின்று சீரும் சிறப்புடன் வாழ்ந்த எமது சைவசமய மக்கள் தொடர்ந்தும் புனிதமான பாரம்பரிய சிவபூமியில் தமது மனத்துயரை அகற்றி ஆத்மீக சாந்தியையும், இறை பக்தியையும், பொதுப்பணிகளை ஊக்குவிக்க எதிர்காலச் சைவ உலகம் இன்றைய சைவ இளைஞர்களுடைய கையிலே தான் உண்டு.

"சொல்லுதல் யார்க்கும் எளிய- அறிவாம் சொல்லிய வண்ணம் செயல்" எனவே அலங்காரமான வாய்ப்பேச்சில் ஒருவித பயனுமில்லை. இன்றைய இளைஞர்கள் உண்மையில் சுயநலம் கருதாப் பரோபகாரியர்களாக நற்ற மிழையும், மெய்ச்சமயமாகிய புனிதமான சைவத்தையும் வளர்க்க இன்றைய இளைஞர்கள் சகலரின் உள்ளங்களிலே தெய்வ உணர்வு, தெய்வீக நம்பிக்கை, சத்தியம், நல்லொழுக்கம் ஆகியன சுடர் விட்டெழவும், பொதுப்பணிகளில் மிக்க உற்சாகத்துடனும், மிக்க ஆர்வமுடனும், புனிதமாகவும், உள்ளன்புடன் செயல் பட்டு தம்மிடையே முதற்கண் ஒற்றுமையை நிலைநாட்டி ஆவனபுரிந்து வருவதை எவரும் உள்ளத்தால் பாராட் டாமல் இருக்க முடியாது. யதார்த்த நிலையில் இளைஞர்கள் கர்ம வீரர்கள் எனின் மிகையாகாது.


பாரம்பரிய சிவபூமியில் யார் ஒருவர் தம்மை உண்மையாக அர்ப்பணித்து புனிதமாகவும், உள்ளன் போடும் ஆலய- சமய- சமூக- சுயநல மற்ற தொண்டுகள், பணிகள் செய்து வருகிறார்களோ அவர்களை அந்த அந்தப் பொது அமைப்பைச் சேர்ந்த

நீ தேடும் ஆத்மா உண்மையில் நீயே.

நிர்வாகத்தினர்களாலும், அந்த அந்தப் பகுதியைச் சேர்ந்த ஊர்ப்பொது மக்களாலும் உண்மையில் உள்ளன்போடு உயிருடன் நற்சேவைகள் செய்பவர்களை நாம் மனதாரப் பாராட்டி போற்றித், துதித்து, வாழ்த்த முன்வர வேண்டும்.

உண்மையில் தம்மை அர்ப்பணித்துப் பொதுப்பணி செய்பவர்கள் இறைவனடி சேர்ந்தபின் நினைவஞ்சலிக் கூட்டம், கௌரவ பட்டம் வழங்குவதைத் தவிர்த்து உண்மையான ஆலய- சமய- சமூகப்பணிகள் செய்பவர்களை நாம் உயிருடன் அவர்களின் சேவைநலன் களைப் பாராட்டி அவர்களை மனதாரக் கௌரவிப்பதே சைவ சமயத்தின் உண்மையான பண்பாடு ஆகும்.

"தேச சேவையே தெய்வத் தொண்டு"
"பணிபுரி; பலனை எதிர் பாராதே"
"என்றும் வேண்டும் இன்ப அன்பு"
"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"
"அன்பு ஆனந்தத்தையும் அமைதியையும் தரும் அருமருந்து"



அநுராதபுரம் விவேகானந்தா கல்லூரியின் பொன்விழா நிகழ்வின்போது ஆச்சிரமத்தின் சார்பில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட எமது பேரவை உறுப்பினர்களை இங்கே காணலாம்.

கல்விக்கு கரையில்லை கற்றவருக்கு இழிவில்லை.

உ

(தொடர்ச்சி...



# கந்தன் இனியன்

டாக்டர் மொ. அ. துரை. அரங்கசாமி M.A, M.O.L, Ph.D. அவர்கள்
(தமிழ்த்துறைத் தலைவர் மதுரை பல்கலைக்கழகம் மதுரை– 2)

பழமுதிர் சோலைப்பகுதி, முருகன் யாண்டு யாண்டு உறைதற் குரியன் என்பதை உணர்த்துகின்றது; ஊர் ஊர் கொண்ட சீர்கெழு விழவினும் அவன் உறைதற்கு உரியன்; தன்மேல் அன்புடையார் ஏத்துதலாலே தன்மனம் பொருந்துதல் வருகின்ற இடத்தினும் அவன் உறைதற்குரியவன்; வேல் ஏந்தி ஆடும் வேலவன் இழைத்த வெறி ஆடும் (தெய்வம் ஏறி ஆடும்) களத்தினும் அவன் உறைதற்கு உரியன்; காட்டிலும், சோலையிலும், அழகுபெறும் ஆற்றி டைக்குறையினும் அவன் உறைதற்கு உரியன்; ஆறுகளிலும், குளங்களிலும் அவன் உறைதற்கு உரியன்; முற்கூறிய ஊர்களிலன்றி வேறுபட்ட பலவாகிய ஊர்களிலும், அவன் உறைதற்கு உரியன்; நாற்சந்தியினும், முச்சந்தி யினும், ஐஞ்சந்தியினும், புதிய பூக்களையுடைய கடம்ப மரத்தடியிலும், ஊர்க்கு நடுவாய். எல்லோரும் இருக்கும் மரத்தடியினும் அம்பலத்திலும், கந்து உடை நிலையினும் (ஆதீண்டு குற்றி அல்லது யானைத்தறி அல்லது ஏதோ நட்ட ஒரு தறி உடைய இடத்திலும்) அவன் உறைதற்கு உரியன்; வெண்ணூற் காப்புக்கட்டி, ஆட்டுக் கடாவின் குருதியோடு (இரத்தத்தோடு) பிசைந்த தூய வெள்ளரிசியைச் சிறுபலியாக இட்டுத் தூபம் கொடுத்துப் பல வாத்தியங்களை ஒலிக்கப்பண்ணிக் குறமகள் வரப்பண்ணின அகன்ற இடத்திலும் அவன் வந்து உறைதற்கு உரியன்; வேண்டுநர் வேண்டியாங்கு பெற்று உவக்கும் வண்ணம் ஆண்டாண்டு அவன் உறைதற்கு உரியன்; இவ்வாறு அவன் உறைதற்கு உரிய இடங்களாக உயர்வு தாழ்வு கருதாமல் கூறியிருத்தலை நோக்கும் போது அவனுடைய எளியார்க்கு எளியனாம் தன்மை தெற்றென விளங்கு தலை நாம் காணலாம். இங்கே தான் கந்துடைநிலை குறிக்கப்படுகிறது. ஏதோ ஒரு தறிநட்ட இடம் என்பதே அத னுடைய நேர் பொருளாகும். அவனை அதிலிருந்து தோன்றி அருள் செய்யுமாறு வேண்டும் பண்டை வழக்கம் இங்கே குறிக்கப்பெற்றுள்ளது எனலாம். எனவே கந்துடை நிலையில் எழுந்து தோன்றுபவனே கந்தன் எனலாமன்றோ.

இனி, அப்பழமுதிர் சோலைப் பகுதியிலே அவனை வழிபடும் முறையும் உணர்த்தப்படுகிறது. முற் கூறிய அவ்வவ்விடங்களிலே ஆயினும்

ஆகுக, பிறவிடங்களிலே ஆயினும் ஆகுக; "முற்பட நீ கண்டபொழுதே முகம் விரும்பித் துதிப்பாயாக. அவனுடைய தெய்வத்தன்மையைக் கண்டபொழுது அச்சம் பிறவாமல் நிற்பாயாக. கையைத் தலைமேலே வைத்து வாழ்த்துக. பின்னர்த்திருவடி தலையிலே உறும்படி தண்டனிட்டு, 'ஆறுவடிவு பொருந்திய செல்வ, ஆல் கெழு கடவுட் புதல்வ, மலைமகள் மகனே, மாற்றோர் கூற்றே, கொற்றவை சிறுவ, பழையோள் குழவி, வானோர் தானைத் தலைவ, மாலைமார்ப, நூலறி புலவ, செருவில் ஒருவ பொருவிறல் மள்ள, அறிந்தோர் சொல்மலை, மங்கையர் கணவ, மைந்தர் ஏறே, வேல் கெழு தடக்கைச் சால் பெருஞ் செல்வ, மொழிப் புலவர் ஏறே, அரும்பெறல் மரபிற் பெரும் பெயர் முருக, வீடுபெற வேண்டுமென விரும்பி வந்தார்க்கு அதனை நுர்விக்கும் பெரிய புகழை ஆளுதலையுடையாய், பிறரால் இடுக் கப்பட்டு வந்தார்க்கு அருள் பண்ணும் சேய், பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேள், பெரியோர் ஏத்தும் பெரும் பெயர் இயவுள், பொருந, குரிசில்' எனப்புகழ்ந்து கூறுக. இவ்வாறு தான் கூறவேண்டும் என்பதில்லை. நீ உனக்குத் தோன்றியவாறு எப்படி வேண்டுமானாலும் கூறுக. பின், 'உன் தன்மையெல்லாம் அளந்தறிதல் பல் உயிர்க்கும் அரிதாகையால், உன் திருவடியைப் பெறவேண்டுமென்று இடைவிடாது நினைத்து வந்தேன், ஒப்பற்ற மெஞ்ஞானத்தை உடையோய்' என்று சொல்லை நீ கருதிய வீடுபேற்றினை நீ விண்ணப்பம் செய்வதற்கு முன்பே, அவன் பக்கத்திருப்போர் 'இவன் அளிக் கத்தக்கான்' என்று கூற, அவன் தன் அச்சம் தரும் பேருருவத்தை உள்ளே அடக்கிக்கொண்டு மணம் நாறும் தெய்வத்தன்மையை உடைய தன் இளைய வடிவைக்காட்டி உன்மேல் அன்புடைய நன்மொழிகளைப் பலகாலும் அருளிச் செய்து நீயே பிறர்க்கு வீடளிக்கும் உரிமையுடையவன் ஆகும் படி பிறராற் பெறற்கரிய வீடுபேற்றினைத் தருவான்" என்று இவ்வாறு உணர்த்தும் பகுதியை நாம் படிக்கும்போது, பொதுவாக எவ்விடத்தும், சிறப்பாகக் கந்திடத்தும் எளியார்க்கு எளியனாகத் தோன்றும் கந்தன் மிக மிக இனியன் என்பது நன்கு புலப்படுகின்றது.

கந்துடை நிலையிற் கந்தனைக் காண்பாரே வீடுபெற வல்லரெனின், கந்தழி நிலையில் தம் உணர்வே-- உணர்வே கருவியாகக் காண்பவர் வீடு பெற வல்லவராவார் என்பது சொல்லாமலே விளங்கும்.

கந்துடை நிலையிற் கந்தக் கடவுளைக் கண்டு வாழ்த்துதல் அனைவர்க்கும் எளிது. கந்தழி நிலையிற் கந்தனை வாழ்த்துதல் உணர்வு வலி மிக்கார்க்கே இயைவதாகும். ஏதாவது ஓர் இடம், அதில் ஒரு குறி, அதை வழிபடுவதற்கு ஏதாவது ஒரு நேரம் இவைகொண்டு வழிபாடாற்றுதல் எளிது. கால இடைவரையறையின்றிக் கண்ணையும் கருத்தையும் நிறுத்துவதற்கு ஒரு குறியுமின்றி யாண்டும் நிறைந்திலங்

புலனடக்கம் கொண்ட மனிதனை தெய்வமாகப் போற்றலாம்.

குவதாக அதனைப் பாவித்தல் மிகவும் அருமையாகும். எளிமையை உடன்பட்டு அருமையை அவ்வளவாக வரவேற்க மனம் இல்லாமை பற்றியே கந்தழி நிலையும் கடவுள் வாழ்த்தோடு கண்ணி வரும் என்றார் தொல்காப்பியனார்.

என்றாலும் கந்தழி நிலை கடவுள் வாழ்த் தொடு கண்ணிவரும் என்ற தொல் காப்பியரது குறிப்பால் கந்துடை நிலையில் கடவுளை வாழ்த்தி வழிபடுதல் சிறந்ததும் எளியதும் ஆகும். கந்தழி நிலையிற் கடவுளை வாழ்த்தி வழிபடுதல் மிக்க அருமையுடையதாகும் என்ற வேறுபாட்டை நாம் உணர்தல் வேண்டும்.

தமிழ் நாட்டில், இவ்வேறுபாட் டினையும், கந்துடை நிலையிற் கட வுளை வாழ்த்தி வழிபடுதலின் எளிமை யினையும் சிறப்பினையும் உணர்ந்த சான்றோர்கள் அதனையே மிகுதியாகக் கடைப்பிடித்ததால்தான் தமிழ் நாட்டில் கோயில் வழிபாடும் வழிபாட்டிற்குரிய பாடல்களாகக் தேவார திருவாசக நாலாயிரத்திவ்யப் பிரபந்தங்களும் மிகுந்து தோன்றுவனவாயின. இந்தச் சான்றுகள் கொண்ட கந்துடை நிலை யிற் காட்சிதரும் கந்தன் இனிய னாயினான் எனலாம். கந்துடை நிலை யிற் காட்சியளிக்கும் கந்தனை முதற் கடவுளாகக் கொள்பவர் சிவபெருமான் முதலாகக் கூறப்படும் ஏனைய தெய்வங்கள் எல்லாவற்றையும் அவனுக்கு அடங்கி ஏவல் புரிவனவாகக் கூறுவர். இத்தகைய சிறப்பையும் கந்தனைப்பற்றிய பாடல்களில் காணலாம்.

எளியார்க்கு எளியனாகும் கந்தன் சிவபெருமானுக்கு மைந்தனாம் எளிமை யைக் கொண்டு திகழ்தலில் தவறொன்று மில்லை. அவ்வாறு அவன் திகழும் தன்மைகளைப் பற்றியும் அவனைப் பற்றிய பாடல்களிற் காணலாம்.

கந்தனை முழுமுதற் கடவுளாகக் கொள்ளுங்கால் அவன் முக்காலத்தும் அழிவில்லாதவன்; ஆதலினால் சத்து; எல்லா அறிவும் உடையவன்; ஆதலினால் சித்து; இனியன்; ஆனந்த ஸ்வரூபி; ஆதலினால் ஆனந்தம். எனவே, கந்தன் சச்சிதானந்த ஸ்வரூபி. எனினும், அவன் சத்தாகவும் சித்தாகவும் இருத்த லினால் நமக்கொரு பயனுமில்லை. அவன் அநந்தஸ்வரூபியாய், இனியனாய் நமக்கு இனிமை தருபவனாய் இருத்தலே நமக்குப் பயன் தருவதாம். ஆதலினால் தான் அவனை இனியன் எனக்கொண்டு நாம் அவனுக்கு வழிபாடாற்றுதலில் நமக்கு விருப்பம் மிகுகிறது.

(தொடரும்..

***பாம்பின் குணம்***

என்ன உதவி அளித்தாலும் பாம்பின் குணம் போகவே போகாது. அது தன் விஷத்தைக் கக்கியே தீரும். பாம்பைப் போலவே சில மனிதர்களும் இருக்கிறார்கள் அப்படிப்பட்டவர்களை நம்பவே கூடாது.

மனிதனின் குற்றங்கள் நாவிலிருந்தே பிறக்கின்றன.

உ

# சிராத்தம்

திருமதி கிருஷ்ணகுமார் கலைவதனி B.A.

நமது தாய், தந்தையர் இறந்தபின் அவர்களின் நன்மைகருதிச் செய்யப்படும் அபரக்கிரியைகளுள் ஒன்று சிராத்தம் எனப்படும். சிரத்தை யோடு செய்யப்படுவது சிராத்தம். இதனைத் திவசம், திதி என்றும் கூறலாம். சிராத்தம் செய்யப் பெறாதவர் நற்கதி அடையார். சிரத்தையின்றி மனத்தைப் பிறவிடயங்களிற் செலுத்திச் செய்யப்படுவது சிராத்தம் ஆகாது.

தந்தை, தாயார் செய்த தீவினை நீங்கற்பொருட்டுப் பிள்ளைகளாற் செய் யப்படும் சிராத்தமானது அவர்களைச் சென்றடையும் என்பது வள்ளுவரது கருத்துமாகும். கந்தபுராணம், காஞ்சிப் புராணம், திருமந்திரம், திரிகடுகம், புறநானூறு, விநாயகபுராணம், பாரதம் போன்ற நூல்கள் சிராத்தம் செய்ய வேண்டும் என்பதை உறுதி செய்கின்றன.

சற்பாத்திரரைக்கொண்டே சிராத் தம் செய்வித்தல் வேண்டும். சிராத்தம் செய்வதற்குப் புத்திரரே பூரண உரிமை யுடையவர். “தென்புலத்தார் கடனை மாற்றுவது மகனின்றியில்லை” என்பது சிவஞான முனிவர் கருத்து. புத் என்னும் நரகத்தினின்றும் காப்பவர் புத்திரர். புத்திரர் இல்லாதவர் நற்கதி அடைய மாட்டாரா? என்றால் அதற்கும் ஏற்றதான வழிவகைகள் உண்டு.

சிராத்த உண்மை தெரியாத நம்மவர் இதனாற் பயன் என்ன என்று விமர்சனம் செய்கின்றனர். இறந்தவர் எங்கு, எப்படிப் பிறந்தாலும் நாம் கொடுக்கும் தானத்தைச் சர்வவல்லமை யுடையவராய சிவபெருமான் தானே யேற்றுப் பிதிரர்களைக் கொண்டு உரிய வரிடம் தவறாது சேர்ப்பிக்கின்றார். “பிட்சை எடுத்தும் பிதிரரை அழை” என்பது கிராமியப் பழமொழி. இப்பிதிரர் கோபம் இல்லாதவர். சிவத்தியானம் உள்ளவர். தூய்மையானவர். கடமை தவறாதவர்.

நாம் கொடுக்கும் தானப்பொருள் களை இப்பிதிரர் ஏற்று, இறந்தவர் தேவராயின் அமுதமாகவும், அசுரராயின் அவர்கள் புசிக்கும் உணவாயும், பசு வாயின் புல்லாயும், பாம்பாயின் வாயு வாயும், அரக்கர், பசாசுவாயின் தசை யாயும், மானுடராயின் அன்னம் முதலியனவாயும் தானப்பொருளை அவர்களிடம் கொடுத்து மகிழ்விப்பர். இவர்களையே தென்புலத்தார் என வள்ளுவன் குறிப்பிட்டான். இவர்கள் மகலோகத்திற்கு மேலுள்ள சன லோகத்தில் இருப்பவர்கள். பூலோகம் முதலான மேல் ஏழு உலகங்களில் ஐந்தாவதாக உள்ளது சன லோகம். பூலோகத்திற்கும் யமலோகத்திற்கும் இடைத்தூரம் எண்பத்து ஆறாயிரம்

காஞ்சிக்குப் போனாலும் கட்டிலுக்கு கால் நான்கே.

காதம் என்பது கருடபுராணம். ஒரு காதம் என்பது 15மைல். இறந்தவர்களுக்காக தவறாது செய்யவேண்டுவதால் இதனைக் "கடன்" என்று கூறுவர். புராண, இதிகாசங்களிலும் இது வற்புறுத்தப்படுகின்றது. பரதன், இரணியன், சடாயு, கும்பகர்ணன், குச்சகர், இராவணன் போன்றோரும் இக்கடனை மறக்கவில்லை.

இறந்தவர், என்னமாதம், என்ன திதியில் இறந்தார் என்பதைக் கருத்திற் கொண்டு அத்திதியிற் சிராத்தம் செய்வது உத்தமம். ஆபத்துக் காலத்தும், அக்கினி இல்லாவிடத்தும், கிரகண காலத்தும், தீர்த்த யாத்திரை செய்யுமிடத்தும் ஆம சிராத்தம் செய்யலாம். சூத்திரர் முதலாயினோர் ஆம சிராத்தம் செய்யலாம். இயலாத விடத்து இரணிய சிராத்தம் செய்யலாம். ஆமம் - பாகஞ் செய்யப்படாத அரிசி, காய்கறி முதலியவைகளாற் செய்யப்படுவது, இரணியம் பொன்- காசு கொடுத்துச் செய்யப்படுவது. ஆசௌச தினத்தில் சிராத்தம் வந்தால் (தொடக்கு) நீங்கிய பின் செய்யலாம். இராக்காலத்தும், இரண்டு சந்தியா காலத்திலும், பிராதக்காலத்திலும் செய்யலாகாது. ஆமசிராத்தம் கங்கவு காலத்திற் செய்து (மத்தியானம்) அபராணத்தில் போசனம் செய்தல் வேண்டும். சிராத்தத்திற்கு அரிசி, கோதுமை, பயறு, உழுந்து, எள், சர்க்கரை வெல்லம், தேன், நல்லெண்ணெய், பசுப்பால், தயிர், சிகைக்காய், வாழைக்காய் - இலை, பழம், மா, பலா, தேங்காய், இளநீர், எலுமிச்சம்பழம், கீரை, வெற்றிலை, பாக்கு, ஏலம், கராம்பு முதலியனவற்றைப் பயன்படுத்தலாம். கடலை, துவரை, பயிற்றங்காய், முருங்கைக்காய், பூசினி, கத்தரி, வாழைப்பூ, வெண்காயம், எருமைப்பால் முதலியன ஆகாதவைகளாகும்.

வில்வம், துளசி, அறுகு, தாமரை முல்லை என்பவற்றைச் சிராத்தத்திற் பயன்படுத்தலாம். மகிழ், தாழை, அலரி என்பவற்றைப் பயன்படுத்தத்தகாது. சிராத்த தினத்தில் தயிர் கடைதல், நெல் குற்றுதல், பிட்சையிடல், எண்ணெய், நெய் முதலிய பொருள்களைக் கொடுத்தல், வாங்கல் ஆகாது. கண்ணீர் விட்டு அழுதல் இத்தினத்திற் கோவிலில் அபிஷேகம், பூசை, திருவிளக்கேற்றுதல் வேண்டும். பசுக்களுக்குப் புல் போடல் வேண்டும். சிராத்தம் செய்வோர் விரத நியமம் உடையவராய் இருத்தல் வேண்டும். சிராத்தம் செய்வதற்குப் பொருள் இல்லாதவர் காய், கனி, எள், கிழங்கு இவற்றையாவது சற்பாத்திரப் பிராமணருக்குக் கொடுத்து நமஸ்காரம் செய்து, எள்ளுந் தண்ணீரும் இறைத்துத் தருப்பணம் செய்யலாம். அதுவும் இயலாதுவிடின் பசுக்களுக்குப் புல்லையாவது கொடுக்கலாம். எள்ளும் பருத்தியும் பிதிரர்களுக்கு மகிழ்ச்சியை உண்டாக்குவன.

இடிகொண் மாவினாற் பிண்டமே யாயினுமிடுக
இல்லை யென்றிடில் எள்ளுடன் புனல் கையாலிறைக்க
வல்லபம் பெறாதாயின் ஆவினம் அருந்தப்
புல்லதாயினும் போடுக....... -திருச்செந்தூர்ப்புராணம்-

இறைவனை அறிந்து உணர்வதே உண்மையான கல்வி.

ஒருவர் இறந்தமாதம் தெரியாது தினம் மாத்திரம் தெரிந்தால் ஆடி, மாசி, மார்கழி, புரட்டாதி மாதங்களில் வரும் தினத்திற் செய்யலாம் ஒன்றுந் தெரியாதாயின் இறப்பைக் கேள்விப் பட்ட மாத அமாவாசையிற் செய்ய லாம். தாய், தந்தை இருவருக்கும் ஒரேநாளில் சிராத்தம் வந்தால் இரண்டையும் ஒன்றாகச் செய்யலாம்.

சிராத்தம் நடக்கும்போது வேதம், திருமுறை என்பன ஓதுதல் வேண்டும். சிராத்த முடிவில் குருவுக்குத் தட்சணை கொடுத்து, வழிபட்டு, அன்புடன் அனுப்பிவைத்தல் இன்றியமையாதது. குருவானவர் போன பின்பு இடத்தைச் சுத்திசெய்து போசன விதிக்கமைய அதிதிகள், சுற்றத்தாருடன் உணவு அருந்த வேண்டும்.

# இறைவனின் பல வடிவங்கள்

**திருமதி வசந்தா கந்தசாமி அவர்கள்**

பரம்பொருளாகிய இறைவனுக்கு உண்மையிலேயே பல வடிவங்கள் இருக்கின்றன. அனந்த கல்யாண குணங்கள் எனப்படும் ஏராளமான தெய்வீகக் குணங்களும் இருக்கின்றன. ஆனால் வடிவமும் குணங்களும் இல்லாத நிலையும் அவருக்கு உண்டு. மனித மொழியில் விளக்கிச் சொல்ல இயலாத மிகப்பெரிய நிலை அது.

இறைவனை ஒரே ஒரு வடிவத்திற் கண்ட பக்தன் இறைவனுக்கு ஒரு வடிவம் மட்டுமே உண்டு என நினைக்கின்றான். கடவுளைப் பலவித வடிவங்களில் தரிசிக்கக்கூடிய பக்தர்களும் இருக்கிறார்கள். அவர்கள் மட்டுமே இந்த எல்லாவித உருவங்களும் ஒரே பகவானுக்கு உரியவை. மேலும் அளவிட்டுச் சொல்ல முடியாத வடிவங்களும் குணங்களும் அவருக்கு உண்டு என்று உணர்ந்து சொல்லக் கூடியவர்களாக இருப்பார்கள். பச்சோந்தி என்னும் பிராணி தனது நிறத்தைச் சூழலிற்கேற்ப மாற்றிக்கொள்ளும் தன்மை வாய்ந்தது. சில சமயங்களில் ஊதாவாகவும், பச்சையாகவும், சாம்பல் நிறத்திலும்- இப்படிப் பல சமயங்களில் விதம் விதமான நிறங்களிலும் தோன்றுகின்றது. இதைப் போலவே பரம்பொருளாகிய இறைவனுக்கும் பல வடிவங்கள் இருக்கின்றன. கடவுளைச் சதாகாலமும் உண்மையாகவே ஒருவன் நினைக்க வேண்டும். அப்படிப்பட்ட தெய்வீக வாழ்க்கையிலே தோய்ந்திருப்பவனால் தான் இறைவனின் வடிவங்கள், குணங்கள் போன்ற நுட்பமானவையும் புலன்களுக்கு எட்டாதவையுமான அரிய உண்மைகளைப் புரிந்துகொள்ளமுடியும். அவனுக்குப் பகவானே அவற்றை எல்லாம் விளக்கிவிடுகிறார். அப்படிப்பட்ட உயர்ந்த பக்தனுக்குக் கடவுளைப் பற்றிய எந்தவிதக் குழப்பமும் இருக்காது. இறைவனின் அருட்பிரவாகத்தை உணரமுடியும்.

பக்தர்களின் மகிழ்ச்சி பகவானுக்கு ஆகாரம் போன்றது.

உ

# அட்ட புஷ்பங்கள்

திரு ஆ. கதிரமலைநாதன்

அட்ட புஷ்பங்கள் அதாவது எவ்வகை மலர்கள் வெளிப்பூசைக் குரியவை எனவும், மானச பூசைக் குரியவை எனவும் இரு வகையின. இங்கு வெளிப்பூசைக்குரியனவாகச் சொல்லப்படும் அட்ட புஷ்பங்கள் பற்றி ஓரளவு அறிந்து கொள்ளலாம்.

அலரி, சம்பகம், செந்தாமரை, நீலோத்பலம், பாதிரி, புன்னை, வெள்ளெருக்கு, வெள்ளைக்கொக்கிறகம் என்ற இவை எட்டும் எக்காலத்துக்கும் பொருந்துபவை எனப்படுகிறது.

தனியே வைகறைக் காலப்பூசைக் குரியனவான அஷ்ட புஷ்பங்கள் பற்றிக் கூறப்பட்டமையினால் இவற்றை வைகறைக் காலத்துக்குரியனவாக ஏற்றுக் கொள்வது பொருத்தமாகலாம்.

அலரி, நாயுருவி, மல்லிகை, வெள்ளெருக்கு, வில்வம், நந்தியாவர்த்தம், தாமரை, ஏதாவதொரு வெண்மலர் ஆகிய இவை எட்டும் காலைவேளைப் பூசைக்குரியவை எனக் கூறப்படுகின்றது. பொன்னூமத்தை, புலிநகக்கொன்றை, வெண்பாதிரி, வன்னி, செங்கத்தரி, மரமந்தாரை, வெள்ளைக்காக்கனம், தும்பை ஆகிய இவை எட்டும் உச்சிக் கால வேளைப் பூசைக்குரியவை எனச் சொல்லப்படுகின்றது.

மல்லிகை, காட்டு மல்லிகை, பவள மல்லிகை, மகிழ், வெட்டிவேர், சம்பகம், சிறு சம்பகம், மருக்கொழுந்து என்ற இவை எட்டும் சாயங்காலப் பூசை, இரண்டாங் காலப்பூசை, அர்த்தயாமப் பூசை ஆகிய மூன்று வேளைகட்கும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

அட்ட புஷ்பங்களை இறைவனுக்குச் சாத்தும்போது எண்ணிக்கையில் ஒரு பூவும் குறையாது பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும், சொல்லப்பட்டவை யாவும் முழுமையாகக் கிடைக்காவிடில் எண்ணிக்கையில் குறையாதவாறு அவ் வேளைக்கெனக் கூறப்பட்டவற்றில் ஒன்றைக் கூட்டிக்கொள்ள வேண்டும் எனவும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

சில நூல்களில் முன் சொல்லப் பட்டவற்றிற்குப் பதிலாக அலரி, எருக்கு, கொக்கிறகம், தாமரை, நந்தியா வர்த்தம், நீலோத்பலம், பலாசம், மல்லிகை ஆகியவை அட்ட புஷ்பங்களாகச் சொல்லப்பட்டுள்ளன.

அட்ட புஷ்பங்கள் எனச் சொல்லப்பட்டவற்றில் தனியே எட்டு வகைப் பூக்கள் மட்டும் அடங்கவில்லை. பெரும்பாலும் எல்லாப்பூக்களும் அதாவது சேக்கிழார் பெருமானால் எடுத்துக் கூறப்பட்ட கோட்டு மலரும், நில மலரும், குளிர்நீர் மலரும், கொழுங்கொடியின் தோட்டு மலரும் இடம் பெறுகின்றன.

எனவே எவ்வித வேறுபாடுமின்றி, சகல வகைப்பூக்களையும் இறைவனுக்குச்சாத்த வேண்டுமென்பது உணர்த்தப் பட்டுள்ளதாகக் கொள்ளல் தக்கதாம்.

குறிக்கோள் இல்லாத வாழ்க்கை கேவலமான வாழ்க்கை.

உ

தொடர்ச்சி...



# அருணகிரிநாத சுவாமிகள் அருளிய
# கந்தரலங்காரம்

பண்டிதர் சி. வேலாயுதம் அவர்கள்

### *முத்தி வீட்டிற்கு முருகன் அருள் வேண்டும்*

அராப்புனை வேணியன் சேயருள் வேண்டும் மகிழ்ந்தவன்பாற்
குராப்புனை தண்டையுந் தாள்தொழல் வேண்டுங் கொடியவைவர்
பராக்கற வேண்டும் மனமும் பதைப்பறல் வேண்டு மென்றால்
இராப்பக லற்ற விடத்தேயிருக்கை யெளிதல்லவே.

சர்ப்பத்தை அணிந்த சடாமுடியுடைய சிவபெருமானின் மகனாகிய முருகனின் அருள் வேண்டும். மலர்ந்து நெகிழ்ந்த அன்பால் குராஜ்மலர் மாலையையும், தண்டையையும் அணிந்துள்ளதுமாகிய அழகிய திருவடியை வணங்க வேண்டும். கொடிய ஐம்புலன்களாகிய ஐவர்களின் வேடிக்கை ஒழியவேண்டும். மனத்தின் துடிப்பும் நீங்கவேண்டும். இவ்விதம் அடையவேண்டும் என்றால் இரவு பகல் இல்லாத அந்த முத்தியிடத்தில் அசைவற்று இருத்தல் எளிதாகும். அல்லாதவர்க்கு எளிதாகமாட்டாது.

### *பேரின்பமடைய முருகனே தஞ்சம்!*

படிக்கின் றிலைபழ நித்திரு நாமம் படிப்பவர்தான்
முடிக்கின் றிலைமுரு காவென் கிலைமுசி யாமலிட்டு
மிடிக்கின் றிலைபர மானந்த மேற்கொள விம்மிவிம்மி
நடிக்கின் றிலைநெஞ்ச மேதஞ்ச மேது நமக்கினியே.

ஓ மனமே! பழனியில் எழுந்தருளியுள்ள எம்பெருமான் முருகனின் திருநாமங்களைப் படிக்கின்றாயில்லை, படிக்காது விட்டாலும் படிக்கின்ற அடியவர்களது திருவடியைத் தலையில் சூட்டுகின்றாயுமில்லை, முருகா என்று அவனது நாமத்தைக் கூறுகின்றாயுமில்லை, இரப்பவர்கள் பசியால் மெலிவு அடையாது வழங்கி, அதனால் நீ வறுமை அடைகின்றாயுமில்லை, இவ்வாறு செய்வதனாற் பெரிய இன்பம் மிகுந்து வருமாறு விம்மிவிம்மி அழுது கூத்தாடு கின்றாயில்லை இவ்வாறு செய்யாத உனக்கும் (மனம்) உன்னுடன் கூடிய எனக்கும் இனி மரணகாலத்தே பற்றுக்கோடாயிருந்து உதவுவது எது?.

சேவை செய்பவனிடம் வேற்றுமை கிடையாது.

## வணங்காப் பொறிகள் ஏன்?

கோடாத வேதனுக் கியான்செய்த குற்றமென் குன்றெறிந்த
தாடாள னேதென் றணிகைக் குமரநின் றண்டையந்தாள்
சூடாத சென்னியும் நாடாத கண்ணுந் தொழாதகையும்
பாடாத நாவும் எனக்கே தெரிந்து படைத்தனனே.

கிரௌஞ்சகிரி பிளவுறும்படி வேற்படை செலுத்திய மிகுந்த முயற்சியுடைய வரே தென் திசையிலுள்ள திருத்தணிகை என்னும் தலத்தில் எழுந்தருளி இருக்கும் முருகக்கடவுளே, உமது தண்டையணிந்த திருவடியை அணிகலமாகச் சூடிக்கொள்ளாத தலையும், திருவடியைக்கண்டு மகிழாத கண்ணும், அத்திருவடியைக் கூப்பிவணங்காத கையும், உமது புகழைத் துதித்துப்பாடாத நாவும் எனக்கெனவே தேர்ந்து படைத்தான் போலும், தனது படைத்தற் தொழிலில் கோணுதல் இல்லாத பிரமதேவனுக்கு அடியேன் செய்தபிழை யாதோ?

## முருகன் கழலை நினை மனமே

சேல்வாங்கு கண்ணியர் வண்ணப் பயோதரஞ் சேரவெண்ணி
மால்வாங்கி யேங்கி மயங்காமல் வெள்ளி மலையெனவே
கால்வாங்கி நிற்கும் களிற்றான் கிழத்தி கழுத்திற் கட்டும்
நூல்வாங்கி டாதன்று வேல்வாங்கி பூங்கழல் நோக்கு நெஞ்சே.

மனமே! சேல் என்னும் மீனை வெல்லுகின்ற கண்களையுடைய மங்கையரின் அழகிய தனங்களைத் தழுவ நினைந்து ஆவலுற்று மயங்காமல், வெள்ளியங்கிரி போன்ற கால்களை நாட்டி நிற்கின்ற ஐராவத யானையுடைய இந்திரனின் மனைவியாய் இந்திராணியின் கழுத்தில் அணிந்துள்ள மங்கலநாணை (தாலியை) அறுபடாதவாறு அந்நாணில் அவ் இந்திரனது பகைவர்களாகிய சூரபன்மன் முதலாய அசுரர்களை வேற்படையால் வெற்றிகொண்ட முருகப் பெருமானின் திருவடிகளைத் தரிசிப்பாயாக.

பயோதரம் - முலை, களிறு - ஐராவதயானை, முருகன் வேல் எடுக்காவிடின், இந்திராணியின் தாலி இல்லாமற் போயிருக்கும்.

(தொடரும்....

மனிதா! மேடும் பள்ளமுமாக வாழ்க்கை மாறி மாறி வந்தால் உனக்குப் பெரிய வீழ்ச்சியில்லை. ஒரேயடியாக உச்சிக்கு நீ போய்விட்டால் அடுத்துப் பயங்கரமான சரிவு காத்திருக்கிறது.

நல்லொழுக்கம் சமயவாழ்வுக்கு நல்ல வழி.

உ

# கந்தபுராணம்

திரு தருமதுரை சுகந்தன் அவர்கள்

புராணங்கள் இனிய அறங்களை விரித்துக்கூறும் புனிதம் உடையவை. இவை பதினெண் புராணங்கள் எனப்படும். இவற்றுட் சிவபுராணம் பத்து. திருமால் புராணம் நான்கு: பிரம புராணம் இரண்டு: சூரிய புராணம் ஒன்று: அக்னி புராணம் ஒன்று: சிவபுராணம் பத்தினுள் ளுந் தலைசிறந்தது கந்தபுராணம். இஃது ஒரு பெரிய ஞானநூல், காவிய இலக்கணங்கள் யாவும் பொருந்தியது. அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கினையும் விளக்கி அவற்றை அடையும் வழிவகைகளையும் வகுத்துக் கூறுவது.

கந்தன் என்ற சொல் ஆறு திரு மேனிகள் ஒன்று கூடியவன் எனப் பொருள்படும். இனி ஆன்மாக்களுக்குப் பற்றுக்கோடாக இருப்பவன் என்ற பொருளும் இதற்கு உண்டு. கந்தனுடைய புராணம் கந்தபுராணம்.

"கந்தபுராணத்தில் இல்லாத பொருள் எந்தப் புராணத்திலும் இல்லை" என்று ஒரு பழமொழி கூறுகின்றது. இதற்குக் காரணம் இதிற்பல உயர்ந்த சமயக் கோட்பாடுகள் கூறப்பட்டிருத் தலாகும். சைவ சித்தாந்தக் கொள்கை இப் புராணத்தில் மறைபொருளாக அமைகின்றது. இஃது உண்மையில் முன்னொரு காலத்தில் நடந்த ஒரு போர் அன்று. ஆயின் என்றுமே நடந்து கொண்டிருக்கின்ற ஒரு போர்.

கந்தபுராண தத்துவத்தை இவ்வாறு விளக்கலாம். சமம், தமம், முதலிய நற்குணங்கள் தேவர்களாகவும் மனிதரிற் பொதுவாக உள்ளதான ஆணவமலம் சூரபன்மன் எனவும் உருவகப்படுத்தப்பட்டுள்ளன. ஏனையவை; சிங்கமுகன்- மாயாமலம், தாரகன்- கன்மமலம், கிரௌஞ்சமலை- சஞ்சிதவினை, சேவல்- நாதம், மயில்- விந்து, வள்ளியம்மை- இச்சாசக்தி, தெய்வயானை அம்மை- கிரியாசக்தி, வேல்- ஞானசக்தி, முருக வேள்- பரம்பொருள்.

சூரபன்மன், சிங்கமுகன், தாரகன் என்ற மும்மலங்களும் பரம்பொருளாகிய முருகவேளால் அடக்கப்படுகின்றன. ஆயின் அவை அழிக்கப்படவில்லை. இதற்குக் காரணம் "உள்ளது அழியாது இல்லது தோன்றாது" என்ற சற்காரிய வாதமாகும்.

ஆணவமலம் ஆன்மாக்களைத் தளைப்படுத்துகின்றது. இறைவன் அம்மல வலியைக் கெடுத்து, ஆன்மாக்களுக்கு அருள்புரிகின்றான். இவ்வாறாகக் கந்தபுராணம் ஆண்டவன் ஆன்மாக்களுக்கு அருளுந் திறத்தை உணர்த்துகின்றது.

மூவிரு முகங்கள் போற்றி முகம் பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற ஈராறு தோள் போற்றி காஞ்சி

தந்தையையும் தாயையும் பிரியத்துடன் காப்பாற்று.

மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி

காஞ்சியிலே குமரக்கோட்டத்தில் மா மரத்தின் கீழே எழுந்தருளியுள்ள முருக வேளுடைய மூவிரு முகங் களுக்கு வணக்கம். அந்த் ஆறுதிரு முகங்களிலிருந்தும் பொழிகின்ற கருணைக்கு வணக்கம் முருகப் பெருமானுடைய மலர்போன்ற திருவடிக ளுக்கு வணக்கம். அவருடைய திருக் கரத்தில் அமைந்துள்ள ஞான சக்தி யாகிய வேலாயுதத்திற்கு வணக்கம், வணக்கம்.

கந்தரலங்காரத்தின் ஆசிரியர் அருணகிரிநாதர் இவர் ஐந்நூறு ஆண்டு களுக்கு முன்பு வாழ்ந்த முருகபக்தர் சந்தக்கவியின்பம் நிறைந்த திருப்புகழ் இவர்தம் நூல்களிலே தலைசிறந்தது. இது தவிரக் கந்தரலங்காரம், கந்தரனு பூதி வேல்விருத்தம், மயில்விருத்தம், சேவல் விருத்தம், திருவகுப்பு கந்தரந் தாதி ஆகிய நூல்களும் இவருடை யனவே.

விழிக்குத் துணை திருமென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மை குன்றா
மொழிக்குத் துணை முருகாவெனும் நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலும் செங்கோடன் மயூரமுமே.

ஒரு துணையும் இன்றில் பிறந்து இறந்து உழலும் எனது மல மாயை கன்மங்களைப் போக்குவதற்கு முருகக் கடவுளுடைய திருவடிகளும் திருநாமங் களும் திருப்புயங்களும் வேலும் மயிலும் துணைகளாம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

### *வினைப்பயன்*

முற்பிறப்பில் எந்தெந்த உறுப்புகள் குற்றஞ் செய்தனவோ, அந்தந்த உறுப்புகள் துன்பத்தை அடையும்.

திருக்கோவிலிலே தெய்வவழிபாடு செய்கின்ற கணவனுடன் வந்து வழிபடுகின்ற ஓர் அழகிய பெண்மணியைக் கடைக்கண்ணால் உற்று உற்று நோக்கியவனுக்கு மறுபிறப்பில் மாறுகண் உண்டாகும்.


பிறர் பேசும் ரகசியத்தை உற்றுக் கேட்பவன் மறுபிறப்பில் செவிடனாகப் பிறப்பான்.

ஏழையை ஓங்கியடித்தவன் மறுபிறப்பில் கையொடிந்து முடவனாவான்.

*-கிருபானந்த வாரியார் -*

எந்தச் சந்தர்ப்பத்திலும் மனம் தடுமாறாதே.

உ



# மயில்வாகன சுவாமிகளின்

# 20வது ஆண்டு

## குருபூசைத்தின போட்டி

மயில்வாகன சுவாமிகளின் 20வது ஆண்டு குருபூசை 11-08-2005 வியாழக்கிழமை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும்

*போட்டி பற்றிய விபரம்*

குருபூசை தொடர்பாக மாணவர்களுக்கிடையே பேச்சுப்போட்டி நடாத்தப் படவுள்ளது.

| பிரிவு – 1 | பிரிவு – 2 | பிரிவு – 3 |
|---|---|---|
| தரம் 6 – 7 | தரம் 8 – 9 | தரம் 10 – 11 |

பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தாங்கள் கல்விகற்கும் தரம், பிறந்த திகதி, பாடசாலை என்பவை தொடர்பாக விபரங்களை அதிபர்மூலம் அல்லது பெற்றோர் மூலம் உறுதிப்படுத்தி 10-07-2005 திகதிக்கு முன் தபால் மூலமோ நேரிலோ கையளிக்கலாம். வழமைபோல விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு எம்மால் தயாரிக்கப்பட்ட பேச்சுப்போட்டி தொடர்பான விடயம் அனுப்பிவைக்கப்படும்.

போட்டிகள் 31-07-2005 ஞாயிற்றுக்கிழமை சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறும். வெற்றிபெறும் மாணவர்களுக்கு 11-08-2005 வியாழக்கிழமை நடைபெறும் குருபூசைத்தினத்தில் பணத்தொகை, பரிசில், சான்றிதழ் என்பன வழங்கப்படும். அத்துடன் போட்டியில் பங்குபற்றுகின்ற அனைவருக்கும் ஊக்குவிப்புப் பரிசில்களும் வழங்கப்படும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி;

*குருபூசைப் போட்டிக்குழு,*
*சந்நிதியான் ஆச்சிரமம்,*
*தொண்டைமானாறு.*

உ (தொடர்ச்சி...

# அம்மே! அப்பா! என்றழைத்து அழுத பிள்ளையார்

**திரு அ. சுப்பிரமணியம் அவர்கள்**

**இ**ங்கே சிவபெருமான் மலைக் கொடியைப் பார்த்தருளிப் "பால் அடிசில் ஊட்டுக" என்று கட்டளையிடலும் யாவருக்கும் தாய் தந்தை எனும் உமையவள் மூலம் தேவருக்கும் முனிவருக்கும் தெரிதற்கரிய சிவஞான ஒளிபரவச் சிவஞானசம்பந்தராகினார். மின்ஒளி பெற்ற எமக்குக் குமிழ் மட்டுமே தெரிவது போன்று சிவஞான ஒளி பெற்ற சம்பந்தருக்குத் தோடுடைய செவியனாகிய சிவசொருபமே கண்ணில் நிழலாடிற்று.

திருஞானசம்பந்தருடைய வரலாறு சைவ மெய்யன்பர் அறிந்தவையே. நால்வர் நான்மணிமாலை பாடியவர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள். அவர் இப்புராணத்தில் இடம்பெற்றுள்ள பாண்டிமாதேவியாகிய மங்கையர்க்கரசியாரை மலையரசன் புதல்வியாகி இறைவனது வாமபாகத்தமர்ந்த உமாதேவியாரிலும் உயர்த்திப்பாடி வைத்துள்ளமை காணலாம் பிள்ளையார் அம்மே அப்பா என்று அழுகிறார். அப்போது பாலூட்டுமாறு பரமன் பணிக்கவே பார்வதி ஊட்டுகிறாள். ஆனால் பாலறா வாயர் பாண்டிநாட்டுக்கு வந்த செய்தி கேட்டலுமே மங்கையர்க்கரசியாரது வன முலைகள் பால் சொரிந்தனவாம். மேலும் வேயுறுதோளி பங்கன் பிரமகபாலம் ஏந்திப் பிட்சையெடுக்கின்றான். தக்கனாகிய மாமனால் அவமதிக்கப்படுகிறார். பன்றி வேட்டைக்குச் சென்று பார்த்தனிடம் வில்லடிப்படுகிறார். சாக்கியரால் கல்லடிபடுகிறார். கண்ணப்பனால் உதைபட்டார். மங்கையர்க்கரசியரால் சமணச் சாக்கடை தூர வாரப்பட்டது. கூன்பாண்டியன் நின்றசீர் நெடுமாறன் ஆகினான். சைவத்துறை துலங்கியது. பாண்டிமாதேவியார் தம் பாதங்கள் பரவலுற வந்த சேக்கிழார் பெருமான் தரும் மங்கையர்க்கரசி அம்மையார் புராணத்தில்

"பூசுரர் சூளாமணியாம் புகலி வேந்தர் போனகஞானம் பொழிந்த புனித
-வாக்கால்
தேசுடைய பாடல் பெறுந் தலத்தினாரைச் செப்புவதியா மென்னறிந்து
-தென்னந் கோமான்
மாசில் புகழ் நெடுமாறன் தனக்குச் சைவ வழித்துணையாய் நெடுங்காலம்
-மன்னிப்பிள்ளை
ஆசில் நெறி யவரோடுங் கூடாசர் அடிநிழற்கீழ் அமர்ந்திருக்க அருளும்
-பெற்றார்

என்று வாயார வாழ்த்துகின்றமை சீகாழி வேந்தன் சிவஞானம் பருகிப் பொழிந்த தூய வாக்கினால் அல்லவா?

அன்பைவிட வலியசக்தி உலகில் எங்கும் இல்லை.

தென்புகலி வேந்தன் வாழ்ந்த காலம் கி.பி 640 முதல் 656வரையான 16ஆண்டுகள் என்கிறது டாக்டர் மா. இராசமாணிக்கனாரது பெரியபுராண ஆராய்ச்சி நூல். பாடியுள்ள பாசுரங்கள் 4158. நேரிலே தரிசித்த தலங்கட்கு மேலாகத் தொலை நோக்கில் செய்மதிப் பெருகு சிவஞானத்தின்மூலம் உண்மை கண்டு திருக்கேதீஸ்வரம், திருக்கோ ணேஸ்வரம் என்னும் ஈழத்துச் சிவதலங் கள்மீது பாடப்பெற்றுள்ள பதிகங்கள் "தாயினும் நல்ல தலைவர்" பெருமை களை அடியார்கள் அறிந்து வழிபட வகைசெய்வன ஆகும்.

"ஓடம் சிவிகை உலவாக்கிழி யடைக்கப்
பாடல் பனை தாளம் பாலை நெய்தல் - ஏடெதிர் வெப்(பு)
என்புக்குயிர் கொடுத்தல் ஈங்கிவை தாம் ஓங்கு புகழ்த்
தென்புகலி வேந்தன் செயல்"

என்கிறது சைவசித்தாந்த நூலாகிய திருக்களிற்றுப்படியார்.

திருமுறைகள் தெய்வத்தமிழ் மறைகள்; தமிழ்தம் நெறிமுறைகள். ஆம்

திருச்சிற்றம்பலம்

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் ல.ஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

திருச்சிற்றம்பலம்.

மூன்றாம் திருமுறை, 3052ஆம் பாசுரம்.

(முற்றும்)

பெரியவர்கள் பெரும் தியாகங்களைச் செய்கிறார்கள். அதன் விளைவாக வரும் நன்மைகளை மனிதகுலம் பெற்று அனுபவிக்கிறது. இந்த உண்மையை நீ உலக வரலாறு முழுவதிலும் காணலாம்.

உனது சொந்த முக்திக்காக எல்லாவற்றையும் நீ துறந்துவிட விரும்பினால் அது அவ்வளவு ஒன்றும் பாராட்டுவதற்கு உரியதில்லை. உலகத்தின் நன்மைக் காக உன் முக்தியையும் நீ தியாகம் செய்துவிட விரும்புகிறாயா? அப்படி நீ செய்தால் கடவுளாகவே நீ ஆகிவிடுவாய். இதைச் சற்று சிந்தித்துப் பார்.

*-சுவாமி விவேகானந்தர்-*



கயவருக்கு நல்லார் இணக்கம் வேதனை தரும்.

உ

# இல்லையே என்னாத இயற்பகையார்

திரு நா. நல்லதம்பி அவர்கள்

ஆற்றுப் பெருக்கு அற்று, அடிசுடும் அந்நாளும்
ஊற்றுப் பெருக்கால் உலகு ஊட்டும் - ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார், நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லை என மாட்டார் இசைந்து.

ஆற்றுப்பெருக்கு அற்றுப்போய் மணலாக இருக்கும் அந்த ஆற்றோரத்திற் குழிதோண்டி நீர் எடுப்பார்கள். இவ்விதமாக அந்த ஆறு ஊற்றுநீரால் உலகுக்கு உபகரியாக விளங்குகிறது. அதுபோல நற்குடிமக்கள், வறுமையடைந்தாலும் இல்லை என்று சொல்லாமற் கொடுப்பார்கள் என்கிறார் ஔவையார்.

பதினெட்டாம் நாட்போரிலே உயிருக்குப் போராடிக்கொண்டு தேர்க்காலிற் சாய்ந்து கிடக்கும் கர்ணனிடம், வேதிய வடிவங்கொண்டு கண்ணபிரான் வந்து பிட்சை கேட்கிறார். அந்த நேரத்திலே, அங்கே கையால் எடுக்கக்கூடிய பொருட்கள் இல்லாத வறுமை கர்ணனுக்கு. இல்லை என்று சொல்லிப் பழகாத கர்ணன், "ஓவிலாது யான் செய் புண்ணியம் அனைத்தும் உதவினேன், கொள்க நீ" என்று அந்த இடத்தில் தன்னால் இயன்றதைக் கொடுக்கிறான்.

"இல்லையென்று இரப்போர்க்கு இல்லை என்று உரையா இதயம் நீ அளித்தருள்" என்று வரமும் கேட்கிறான், பொருளைக் கேட்டானில்லை. ஏன்? மனம் இருந்தால் இடம் உண்டு என்பது அவனுக்குத் தெரியும்.

இதுபோலவே, இயற்பகையார் என்ற சிவனடியார் இல்லை என்னாது கொடுப்பவராக விளங்கியிருக்கிறார். மேலும் இவர் ஒருபடி மேலே சென்று, தனது மனைவியைத் தரும்படி கேட்ட சிவனடியாருக்கு அவளைக் கொடுத்து விடுகிறார்.

இவர், தம்மிடம் உள்ள எந்தப் பொருளைக் கேட்டாலும் அதை உடனே கொடுக்கும் கொள்கையுடையவர். "இயல்வது கரவேல்" என்பதில் உறுதி உள்ளவர். அதிலும், இரப்பவர் சிவனடியாராக இருந்தால், ஒன்றையும் யோசிக்க மாட்டார்; உடனே கொடுத்துவிடுவார்.

"இல்லோர் இரப்பதும் இயல்பே இயல்பே
இரந்தோர்க்கு ஈவதும் உடையோர் கடனே"

என்பது நீதிநெறியாக இருக்கிறது.

ஆனால், இயற்பகையார் கொஞ்சம் வித்தியாசமானவராக விளங்கியிருக்கிறார். ஒரு சிவனடியார் வந்து, ஏதாவது கொடுங்கள் என்று யாசிப்பதும் கொடுப்பதும் சாதாரணமான நிகழ்வு. இயற்பகையாரோ, எதைக் கேட்கிறார்களோ அது தம்மிடம் இருந்தாற் கொடுத்து விடுவார். இயல்புக்கு மாறாக

மன அமைதி வேண்டுமானால் பிறரிடம் குற்றம் காணாதே.

பகையாக இருந்தபடியால் இவர் "இயற்பகையார்" ஆகி இருக்கிறார் போலும்.

ஊரிலே இல்லாத ஒரு பழக்கத்தில் இவன் தனது மனைவியை இன்னொருவனுக்குக் கொடுக்கிறானே என்று உற்றாரும் ஊராருமாகக் கொதித்து எழுந்து போராடியவர்கள் எல்லோரையும் கொன்றுவிட்டு, மனைவியையும் சிவனடியாரையும் ஊரெல்லை வரை பாதுகாப்பாக அழைத்துக் கொண்டு போகிறாரென்றால் இயற்பகையாரின் சிவப்பற்று எத்தகையது என்பது விளங்கும்.

இயற்பகையாரின் மனைவியாரோ என்றால், எதிர்ப்பவர்களையெல்லாம் வெற்றிகொள்ளக்கூடிய ஆற்றல் இயற்பகையாருக்கு இருக்கின்றதென்று தைரியங்கூறிப் புதிய சிவனடியாரோடு செல்லுகின்றார் எனவும் சேக்கிழார் நாயனார் கூறியுள்ளார்கள்.

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலான் பெண்"

என்று பாடலிலே, ஒரு பெண் தன்னைக் கற்புடையவளாகக் காத்துக் கொள்ளவேண்டும். தனது கணவனது நலத்தைப் பேணவேண்டும்; ஊராரின் மதிப்பைப் பெறவேண்டும்; சோர்வில்லாமல் வாழவேண்டும் என்று அறம் உரைக்கின்றார் வள்ளுவனார்.

ஆனால் சிவனடியாராகிய இயற்பகையாரின் மனைவியார் கணவனுக்கேற்ற மனைவியாக நடந்து கொள்கிறார்; ஒருவனுக்கு மாத்திரம் தான் மனைவியென்ற நிலையில் தன்னைக் காத்துக்கொள்ளவில்லை. எல்லாம் சிவன்செயல் என்று வாழும் தமது கணவனின் சொல்லுக்கும் செயலுக்கும் ஒத்துழைக்கிறார்.

இலக்கிய உலகிலே, தனது மனைவியை ஒருவன் கொடுக்கல் வாங்கல் செய்வது தர்மம் என்று கொள்ளவில்லை.

சூதாட்டத்திலே நாடுநகரை இழந்து நின்ற நளமகாராசனிடம் புட்கரன் என்ற சிற்றரசன் ஒருவன், தமயந்தியைப் பணயம் வைத்துச் சூது ஆடக்கேட்டான். செய்யக்கூடாத காரியத்தைச் செய்யும்படி கேட்கிறாயே என்று கோபித்துக்கொண்டு, நாட்டை விட்டு வெளியேறினான் நளமகாராசன்.

சத்தியம் தவறாத கொள்கைக்காக, அரிச்சந்திரன் தனது மனைவியையும் மகனையும் கூலியாட்களாகவே விற்கிறான்.

பாஞ்சாலியைப் பணயமாக வைக்க வற்புறுத்திய துரியோதனனுக்கு பாடம் கற்பிப்பேன் என்று வெகுண்டு சபதஞ்செய்து பாண்டவரோடு வனவாசம் போகிறாள் பாஞ்சாலி.

சீதையை இராவணன் கவர்ந்து சென்றான். ஆயினும் சீதை இறுதிவரை ஏகபத்தா விரதம் பூண்டே இருந்தாள். ஆனால், இயற்பகையார், சிவனடியார் ஒருவர் கேட்டதும் அவரோடு செல்லும்படி மகிழ்ச்சியோடு அனுப்புகிறார். அவள் அதற்கு மறுப்பில்லாமற் போகிறாளே என்பதற்கு வணக்கம் கூறி அனுப்பிவைக்கிறார்.

நேர்மையானவர்களிடம் அதிகம் பணிவு இருக்கும்.

"இன்னும் ஏதாவது வேண்டுமானாலும் சொல்லுங்கள்" என்றும் இயற்பகையார் சிவனடியாரைக் கேட்கிறார்.

"செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்"

என்கிறார் தெய்வப்புலவர்.

இவ்வாறான செயல்களைச் சாதாரண மனிதன் செய்யமுடியாது.

செயற்கருஞ் செயலைச் செய்த மனநிறைவு இயற்பகையாரிடம் காணப்படுகிறது. அந்த மனநிறைவுதான், "இன்னும் என்ன வேண்டும்" எனக் கேட்கத்தூண்டுகிறது.

"இது உனக்கும் எனக்கும் அல்ல, கண்ணே! இது ஊராருக்கு அல்லவா சொன்னேன்" என்று கூறிய பிரசங்கியார் அல்லவே இயற்பகையார்! இவர்கள் நிறைமொழி மாந்தர்கள்; சொன்னதைச் செயலிற் காட்டும் வல்லமை படைத்தவர்கள். இத்தகைய சிவனடியார்களின் பெருமையை வேதங்கள் வெளிப்படுத்திக் காட்டும்.

"நிறை மொழி மாந்தர் பெருமை நிலத்து
மறை மொழி காட்டி விடும்"

என்பது வள்ளுவன் கூறும் அறமாகும்.

மேலும், இந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு போகும்போது எதிர்த்து நின்ற ஊர்மக்களைக் கொன்றதும் இயற்பகையாருடைய சிவபக்தியின் வலிமையைக் காட்டுகிறது.

ஊரெல்லைவரை வழியனுப்பி விட்டுத் திரும்பியவரை அந்தச் சிவனடியார், இங்கே வா என்று கூப்பிடுகிறார்.

அப்பொழுதும், ஏதோ அபாயம் நேர்ந்து விட்டதாக எண்ணியே இயற்பகையார் திரும்பி ஓடுகிறார்.

அவ்விதம் ஓடியவர் அங்கே சிவனடியாரைக் கண்டாரில்லை; தமது மனைவியார் மாத்திரம் தனிமையில் நிற்பதைக் காணுகின்றார்.

உணர்ச்சி வசப்பட்டு நின்ற இயற்பகையாருக்குச் சிவபெருமான் உமாதேவி சமேதரராகக் காட்சி கொடுக்கிறார். "எம் மீதும் எமது அடியார் மீதும் களங்கமில்லாத பக்தி கொண்டிருக்கும் இயற்பகையே, நீ உனது மனைவியாரோடு எம்மிடம் வா" என அழைத்து மறைகின்றார்.

இயற்பகையாரும் அவரது மனைவியாரும் இறைவனடி சேர்ந்து பேரின்பவாழ்வு பெறுகிறார்கள்.

இயற்பகையாருடன் போரிட்டு இறந்தவர்களும் இறைவனடி சேருகின்றார்கள் என்று சேக்கிழார் கூறுகின்றார்கள்.

இதனால் நாம் உணரக்கூடியது என்ன? இயற்பகையாரின் செயல், உலக நியதிக்கு மாறுபட்டது; தமது சிவபக்தியைக் காட்டுவதற்காக ஊராரை எதிர்த்ததும் கொன்றதும் நியாயமற்றது; ஊராரும் மனச்சாட்சிப்படியே, சிவபக்தி கொண்டே

பண்பில்லாத இடத்தில் சுதந்திரம் இருக்கமுடியாது.

எதிர்த்தார்கள் என்பதைக் காட்டு கிறார்கள்.

இயற்பகையாரின் சிவபக்தியின் வலிமையைக் காட்டுவதற்காக அவரின் செயலுக்கு எதிரிகளை உருவாக்கியது சிவபெருமானுடைய திருவிளையாடல் எனக் கொள்ளவேண்டும். எல்லாம் சிவன் செயலே.

### தேங்காய் உடைக்கும் தத்துவம்

தேங்காயை உரிக்காமல் அப்படியே நிவேதனம் செய்வதில்லை. மட்டையையும் நாரையும் நீக்கிவிட்டு இறைவனுக்குப் படைக்கிறோம். தேங்காயை உடைத்து உள்ளே இருக்கும் நீரை இறைவனுக்கு அர்ப்பணிக் கிறோம். தேங்காய்க்குள் இருக்கும் நீர் நமது வினைகளைக் குறிப்பிடுகிறது. தேங்காயிலிருந்து நீரை வெளியேற்றுவது நம்மைத் தூய்மைப்படுத்துவதை உணர்த்துகிறது. நாம் நமது இதயத்திலுள்ள ஆசாபாசங்களை நீக்கிவிட்டு மனதில் உள்ள எல்லாச் சிந்தனைகளையும் வடித்துவிட்டு இறைவனுக்கு நம்மை அர்ப்பணிக்க வேண்டும். உள்ளே நீர் இருக்கும் வரையில் தேங்காய் மீண்டும் தென்னையாக வளர வாய்ப்பு இருக்கிறது. தேங்காய் நீரின்றி முற்றிவிட்டால், அதன் பிறகு அது நட்டாலும் வளராது. நாம் மீண்டும் பிறவி எடுக்காத நிலையை அடையமுற்பட வேண்டும் என்பதையே தேங்காய் நமக்குத் தத்துவரீதியாக விளக்குகிறது. தேங்காய் உடைப்பது குறித்து வேறுசில தத்துவ விளக்கங்களும் உள்ளன. அவை பின்வருமாறு:-

தேங்காய் என்பது நமது மனித உடலைப் பிரதிபலிக்கிறது. வெளியே பளபளப்பான மேல்த்தோலையும், உள்ளே பிசிறு பிடித்த நார்ப்பகுதியையும் தேங்காய் கொண்டிருக்கிறது. அத்தகைய தேங்காய் நாரை உரித்த பிறகு அதைக் கோயிலுக்கு நாம் எடுத்துச் செல்கிறோம்.

இன்னொரு தத்துவ விளக்கமும் உள்ளது. தேங்காயின் மேல் கடினமான ஓடும், உள்ளே இனிய இளநீரும் இருக்கிறது. உருண்டையான புற ஓடு பிரபஞ்சத்தை ஒத்திருக்கிறது. இரண்டும் கோளவடிவம் உடையவை. இது உலகமாயையைக் குறிப்பது. உள்ளே உள்ள வெண்ணிறமான பகுதி பரமாத்மாவைக் குறிக்கிறது. இளநீர் பரமாத்மாவால் விளையும் பரமானந்த அமிர்தத்தை ஒத்திருக்கிறது. ஜீவாத்மா மாயையின் காரணமாக பரமாத்மாவை உணராமல் பரமானந்த பிராப்தியும் பெறாமல் நிற்கிறது. அதுபோல் வெள்ளைப் பகுதியையும், இளநீரையும் காணமுடியாமல் ஓடு மறைக்கிறது. இறைவன் சந்நிதியில் மாயையை அகற்றி ஒளிமயமான உருவத்தைக் காட்டி, பரமானந்தப் பேரமுதத்தை நுகரச் செய்யும் செயலை இது காட்டுகிறது.

இவ்வளவு உட்கருத்துக்கள் இருப்பதால் நமது பெரியோர்கள் தேங்காயை இறைவழிபாட்டில் முக்கியமாக வைத்திருக்கிறார்கள்.

நல்லவற்றையே பேசு அல்லது மௌனமாக இரு.

உ

# யார் இந்த (ச்) செல்லம்மா?

## சச்சிதானந்தா ஆச்சிரமம்
## ஸ்ரீ சச்சிதானந்தா சுவாமிகளின் வரலாற்றுச் சுருக்கம்
## குருநாதரின் சமாதி

சுவாமிகள் அம்மையாருக்கு ஆறுதல் வார்த்தைகளும் அறிவுரைகளும் கூறிக்கொண்டிருக்க இராப் பொழுது கழிந்து விடியும் நேரமாகி விட்டது. அதிகாலைவேளை நல்லூர்க் கந்தனின் ஆலய மணியோசை "டாண் டாண்" என்று கூவி ஒலித்துக் கொண்டிருந்தது. "சுவாமி, நல்லூர் மணி கேட்கிறது? என அம்மா கூற "நல்லூர் மணி மட்டுமா உனக்கு கேட்கிறது? அங்கே சிதம்பர மணி கூடக்கேட்கிறது. பதஞ்சலிமுனிவர் முதலியோர் நர்த்தனம் ஆடுகிறார்கள்" என்று கூறி, அம்மா, தேகம் விடப்போகிறேன். கற்பூரத்தைக் கொழுத்து, உருத்திராக்க மாலையைப் போடு" என்று கூறி, உடலையும் களைந்து, மனதையும் களைந்து தன் மெய்ச்சொருபத்தில் ஆழ் சமாதிக்குள் செல்லத் தொடங்கினார். பேச்சு நின்று விட்டதைக் கண்ட அம்மையார் பயந்து விட்டார். டாக்டரைக் கூட்டிவந்து காட்டினார். சுவாமிகள் சமாதிக்குள் செல்வதை அறியாத டாக்டர் "உடலில் சூடு இருக்கிறது எதற்கும் ஒரு ஊசி போட்டுப் பார்க்கிறேன்" என்று கூறி ஒரு ஊசியும் போட்டார். சுவாமிகளோ தேக, மன உணர்வுகளுக்கு அப்பால் தம் சுயம் பிரகாச சொருபத்தில் சமாதியாகிக் கொண்டிருந்தார்.

சிறிது நேரத்தில் தேக நீக்கம் செய்த சுவாமிகள், சத்சித் ஆனந்தத்தில் கலந்து விதேக முக்தியெய்தினார். டாக்டரும் தமது தவறை உணர்ந்தார். இவர் மிகப்பெரிய மகான் என்பதை அறியாமல் இவரது சமாதி நேரத்தில் ஊசி போட்டேனே" என்று கழிவிரக்கப்பட்டார். பின் மோட்டார் வாகனம் ஒன்றைப்பிடித்து விடியும் நேரம் சுவாமிகள் தேகத்தை அதில் அமர்த்தி ஆச்சிரமத்திற்கு அனுப்பிவைத்தார். மறுதினம் சுவாமிகளின் உடல் ஆச்சிரமத்தில் வைக்கப்பட்டிருந்தது.

கைதடியில் சுவாமிகளின் சமாதியை அமைப்பதற்கான முயற்சிகள் ஊரவர்களின் எதிர்ப்பால் கைகூடாமற் போயிற்று. அம்மையார் இது குறித்து மனவாட்டமுற்றார். கூட்டமாகக் கூடிய ஊரவர்கள் பொல்லு தடிகளுடன் வந்து கலகம் பண்ணியபடி இருந்தனர். இந்நேரம் வைத்தியர் சின்னப்பு, சரசாலை சுப்பிரமணியம், கைதடி சுப்பிரமணியம் ஆகிய சுவாமிகளின் நன் மாணாக்கர்கள் வைத்தியரின் காரில், சமாதி வைப்பதற்கான அனுமதிப் பத்திரம் (பேமிற்) எடுப்பதற்கு அங்குமிங்குமாக ஓடித் திரியும் போது புத்தகச் சுவாமி சிவப்பிரகாசம் என்பவர் சந்தித்து "காரை" இணுவிலிற்கு விடும்படி கேட்கவே, இரவு

ஒருவனின் பேச்சிலிருந்து உள்ளப் பண்பை அறியலாம்.

ஏழு எட்டு மணியளவில் இணுவில் சென்று சிவகாமியம்மன் கோவிலடியில் காரை நிறுத்தினர். காரை நிற்பாட்டி யதும் சிவப்பிரகாச சுவாமி, சிவகாமி யம்மன் கோவிலின் மேற்கு வீதியில் உள்ள வீட்டில் விடயத்தைக் கூறவே அவர்கள் நாலா பக்கமும் ஓடிச் செய்தியை உரியவர்களுக்குத் தெரிவித் தனர். செய்தியைக் கேட்ட சுவாமிகளின் உறவினர்களும், அவரைத் தெரிந்திருந்த ஏனையோருமாகப் பலர் கார்களை அமர்த்திக் கொண்டு கைதடியை அடைந்தனர். ஆச்சிரம வாசலிலோ பெருங்கூட்டம் ஆர்ப்பாட்டம் பண்ணியபடி நின்றது. எனினும் ஒருவாறு சுவாமியின் உடலை ஒரு காரில் ஏற்றிக்கொண்டு கார்கள் எல்லாம் புறப்பட ஆயத்த மானதும் அங்கு ஒரு அதிசயம் நிகழ்ந்தது. பொல்லுகள் தடிகளுடன் ஆர்ப்பாட்டஞ்செய்த ஊரவர்கள் அவற்றை எல்லாம் நிலத்தில் போட்டு விட்டுப் பக்தி சிரத்தையுடன் அரோகரா! அரோகரா எனக் கோஷமிடத் தொடங்கி விட்டனர். இங்கு சுவாமிகள் முன்பு கூறிய கூற்று நிஜமானதைக் காணலாம். கைதடியில் தமது சமாதி வைபடாது என்றும் எங்கோ ஒரு சுடலையில் அமையுமென்றும் அவர் குறிப்பிட்டிருந் தார். அவர் வாக்கின் படியே அவரது இறுதிக்கிரியைகள் ஆச்சரியப்படும்படி நிறைவேறின. சுவாமிகளின் ஞான திருஷ்டி பல இடங்களில் இவ்வாறு செயற்பட்டுள்ளமை அவரது தவ மகிமைக்கான எடுத்துக் காட்டுகளாகும்.

இவ்வாறு சுவாமியின் தேகம் இணுவிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு பெருந்தொகையான மக்கள் புடைசூழக் காரைக் காட்டுச் சுடலையில் சமாதி வைக்கப்பட்டது. தவராஜசிங்கமாக யாழ் பிரதேசத்திலே உலவிய ஸ்ரீசச்சிதானந்த சுவாமிகளின் தேகவாழ்வு முற்றுப் பெற்றது. இனி அம்மையாரின் நிலை என்ன என்பதை அடுத்துவரும் அத்தி யாயங்களில் காண்போம்.

## குருநாதரின் சமாதியின் பின்பு

சுவாமியின் சமாதியின் பின்பு அம்மையார் நட்ட நடுக்காட்டில் திக்கற்று விடப்பட்டவராக உணர்ந்தார். நாம் இனி என்ன செய்யப்போகிறோம் எனும் எண்ணம் அவரைப் பிழிந்து வாட்டியது? இதுவரை காலமும் தம் குருவாக இருந்து வழிகாட்டி ஆறுதல் அழித்து வந்த சுவாமிகள் இப்பொழுது இல்லை. எமக்கு இனி வழிகாட்டுபவர் யார்? ஆறுதலளிப்பவர் யார்? எனும் எண்ணம் ஒரு புறம், மற்றும் ஊர் எதிர்ப்புகளை எவ்வாறு எதிர்கொள்வது என்ற எண்ணம் மறு புறமுமாக ஆலையில் அகப்பட்ட கரும்பு போல உள்ளம் அலைக் கழிந்தது? கண்ணீர் தினமும் ஆறாகப் பாயும் நெஞ்சு பகீர் பகீர் என அடித்துக் கொள்ளும். இத்தகைய இக்கட்டான மன நிலைகளிலெல்லாம் குருநாதன் தம்மை ஆட்கொண்ட பெரும் செயல் நினைவில் அவருக்கு வரும் அத்துடன் சமாதியின் முன்பு குருநாதர் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் அவரிற்கு நினைவுவரும். கண்ணீர் ஆறாகப் பெருக குருநாதனை நினைந்து உருகுவார்.

சிந்திக்காது எதையும் சொல்லாதே.

"அப்பு உன்னருளையே நம்பி வெளிக் கிட்டவளடா, என்னைக் கைவிட்டிடாதை" என்று உருகி உருகி மன்றாடுவார். இது ஒரு நாள் இரு நாள் போராட்டமல்ல வருடக்கணக்காக போராட்டம் தொடர்ந்தது.

தம்பிள்ளை தவத்தில் உறுதி பெறவேண்டும் மேன்மை அடைய வேண்டும் என்று சச்சிதானந்த சுவாமிகள் உளமாற விரும்பினார். குருவிற்கு ஏற்ற சிஷ்யையாம் அம்மையாரும் தாம் தவத்தில் நிலைபெற வேண்டுமென உளமாற விரும்பி முயற்சி செய்தார். இத்தகைய குரு சிஷ்ய இணைப்பு கிடைத்தற்கரியது. ஆனால் இம்மண் மற்றும் மக்கள் செய்த அதிர்ஷ்டம் அத்தகைய அரிய நிகழ்வு நிகழ்ந்தது என்று சொல்லவேண்டும்.

தவம் என்பது மெய்யுணர்வு எட்டப்பாடுபடும் முயற்சி. அது கத்தி முனையில் நடப்பது போன்று கடினமான தொரு முயற்சியாகும். இம்மண்ணில் தவம் நாடிப் புறப்பட்டோர் பலபேர். ஆயினும் இதில் இறுதிவரை நிலைபெற்றிருந்து வெற்றியடைந்தோர் மிகச்சிலரேயாவர். இதனைக் கடந்தகால வரலாறு எமக்குப் புலப்படுத்தும். இருப்பினும் ஓர் பெண்ணாக இருந்தும் கூட எத்தனைபேர் எதிர்ப்புக்களையும் சோதனைகளையும் தாண்டி தம் தவ வாழ்வில் உறுதியுடன் எவ்வாறு அம்மையார் ஏற்றம் பெற்றார் என்பதனைத் தொடரும் இவ்வரலாறு ஆராய் வதுடன் தெளிவுபடுத்தும்.

மெய்யுணர்வு பெறுவதற்கான பாதைகள் பலவுள. ஞானமார்க்கம், பக்தி மார்க்கம், யோகமார்க்கம் என வழிகள் பலவுள்ளன. ஒவ்வொரு வகைக்கும் பலப்பல நூல்கள் உள்ளன. ஆனால் அம்மையார் இவற்றைப் பற்றியெல்லாம் அறிந்திருக்கவில்லை. பரமாத்மா, ஜீவாத்மா பற்றிய தத்துவ விளக்கங் களோ, அத்வைத வேதாந்தம் பற்றிய அரிச்சுவடியோ அவரிற்கு எள்ளள வேணும் தெரிந்திருக்கவில்லை. இந்த நிலை 1960ம் ஆண்டளவில் உள்ள நிலை.

அப்படியாயின் அவரின் தவத்தின் ஏற்றத்திற்கான உயிர் நாடியாக விளங்கியது எது? ஆம், குருபக்தி என்பதுதான் அதற்கான விடையாகும். தம்மையாட் கொண்ட குருநாதன் மீது அம்மையார் கொண்ட அசைக்கமுடியாத நம்பிக்கையும் தூய பக்தியும் தான் அவரின் தவத்திற்கான உயிர்நாடியாக விளங்கின என்று கூறின் அது மிகையாகாது. மிகமிகக் குழந்தைத் தனமான அவரின் தூயபக்தி அவரின் தவவாழ்வை ஏற்றம் பெறச்செய்தது?

(தொடரும்...

1) ஒருவனுக்கு நன்மைசெய்ய விரும்பினால், உன் செல்வத்தை அவனுடன் பகிர்ந்து கொள்வதைவிட, அவனுள் உறங்கும் திறமையைத் தட்டி எழுப்புவது சிறந்தது.

2) ஒப்பிட்டுப்பார்ப்பதை மனம் நடத்திக்கொண்டிருந்தால் அங்கே உண்மையான அன்பு இருக்கமுடியாது.

சாந்தமான பதில் கோபத்தை அடக்கும்.

உ

# ஆட்கொண்ட போது

திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்

**இ**றைவனால் ஆட்கொள்ளப்பட்டு அவனது பாதாரவிந்தங்களை அடைய வேண்டுமெனப் பேராவல் கொண்டவர் காரைக்காலம்மையார். சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட வேண்டுமென்பதுதான் தனது ஒரே குறிக்கோள் என்பதை அற்புதத் திருவந்தாதியில் அவர் மிக அற்புதமாக விளக்குகின்றார்.

ஒன்றே நினைத்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன்.
ஒன்றேயென் உள்ளத்தின் உள்ளடைத்தேன் - ஒன்றேகாண்
கங்கையான் திங்கட் கதிர்முடியான் பொங்கொளிசேர்
அங்கையாற் (கு) ஆளாம் அது.

என்ற பாடலில் அழுத்தமாக மீண்டும் மீண்டும் கூறி, தன் ஒரே ஆசை அதுதான் என்பதை வலியுறுத்தியுள்ளதை நாம் காணலாம்.

"கங்கையும் ஒளிரும் பிறையும் முடியிலே சூடியவனும் மிகுந்த பிரகாசமுடைய தீயைக் கையிலே ஏந்தியவனுமாகிய சிவபிரானுக்கு ஆட்படுவது ஒன்றே எனது நினைவு" என்று கூறி, அத்துடன் விட்டிருக்கலாம். அதன் மூலம் தன் விருப்பம் எத்தகையது என்பது தெளிவுபடுத்தப்படவில்லையென அவருக்குத் தோன்றியிருக்க வேண்டும். அதனாற்போலும் "ஏனைய ஆசைகளை விட்டு அந்த ஒரு ஆசையையே துணிந்திருக்கின்றேன்" என எடுத்துக் கூறினார். அதிலும் அவருக்குத் திருப்தியேற்படவில்லை. "என் உள்ளத்தின் உள்ளே அடைத்து வைத்திருக்கும் ஆசை அது ஒன்றே" என மீண்டும் வலியுறுத்தினார்.

எல்லா ஆசைகளையும் விட்டுவிட்டு ஒரு ஆசையைமட்டும் உள்ளத்தில் ஓரிடத்தில் வைத்திருக்கலாமல்லவா? அப்படியில்லை. அந்த ஆசையை உள்ளம் முழுவதும் நிறைத்து வைத்திருந்தார் என்று கூறினாற்கூடப் பொருந்தாது. அதற்கும் மேலாக உள்ளத்துள் அடைத்து வைத்திருந்தார் என்று கூறுவது நயக்கத்தக்கதாக உள்ளதல்லவா?

அப்படிப் பேராவல் கொண்டிருந்த அவர் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு நடராஜப்பெருமானின் திருநடனத்தைக் காண அவனது திருவடியின் கீழ் நிரந்தரமாக இணைந்திருக்கும் பேறு பெற்றார். சிவபிரானின் சரணார விந்தங்களைச் சார்ந்ததும் என்னென்ன நிகழ்ந்ததென்று, அவர் வெவ்வேறு பாடல்களிலே பாடியுள்ளார். இங்கு அற்புதத் திருவந்தாதியின் ஒரு பாடலில் அவர் கூறுவதை மட்டும் பார்ப்போம்.

கிடைக்காத ஒன்றுக்காக கவலைப்படாதே.

காலனையும் வென்றோம் சுடுநரகம் கைகழன்றோம்
மேலை இருவினையும் வேரறுத்தோம் - கோல
அரணார் அவிந்தழிய வெந்தீயம் பெய்தான்
சரணார விந்தங்கள் சார்ந்து.

என்ற பாடலில் முப்புரங்கள் உடைய அசுரர் அழியும்படி வெம்மையான அனல் அம்பை எய்த சிவபிரானின் சரணாரவிந்தங்களை அடைந்ததும் தமக்கு நடந்தவற்றை விவரித்துள்ளார்.

யமனையும் வென்றுவிட்டோம். இனி காலன் வந்து கொல்வதும் இறப்பதும் நடைபெறாது. மரணம் எமக்கு ஏற்படாது. கொடிய நரகத்தினின்றும் விலகிவிட்டோம். இறைவனின் பதத்தை அடைந்தவருக்கு நரகமேது? முன்பு நாம் செய்த வினையில் அனுபவித்தது போக எஞ்சிய சஞ்சித வினையையும் இப்போது நாம் செய்வதால் சேர்ந்த ஆகாமிய வினையும் அற்றுப் போயின. அவை வேரோடு அழிந்து விட்டன. இவ்வளவும் அரனின் சரணாரவிந்தங்களை அடைந்ததனால் நடந்தவையாகும்.

இறைவனால் ஆட்கொள்ளப் பட்டதும் இவை நிகழ்ந்ததாகக் காரைக் காலம்மையார் கூறியுள்ளார்.

## அலையாடும் கடலோரச் சந்நிதியான்

*செல்வன் நீர்வை மயூரகிரி அவர்கள்.*

அலையாடும் கடலோரம் அருளாடும் சந்நிதியுறை
சிலையினால் அரக்கர்குலம் சிதைத்தோன் மருகா
மலைதோறும் விளையாடும் மாதேவா நீயென்
அலையும் மனதடக்கி ஆண்டருள் புரிந்திடுவாய்

விண்ணார் வியந்திட விரிகடல் சூழ்ந்திடும்
மண்ணகத்திற் செல்வச்சந்நிதி மாபதியில்
எண்ணற்கரும் ஏராளமற்புதம் புரிந்திடும்
அண்ணலே ஆறுமுகவா யானுன் அடைக்கலமே

வள்ளி மணவாளனே வளர் சீரங்கத்திற்
பள்ளி கொண்டோன் புகழும் மருகோனே
புள்ளி மயிலோனே பூதலவடியார்க்கு அருள்
அள்ளி அள்ளி வழங்கும் சந்நிதியோனே சரண்

அத்தியாயம்- 89 உ (தொடர்ச்சி..

# மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

(மகாபாரதத்திலிருந்து)

## திருதராஷ்டிர மன்னனின் தவவாழ்வும் முத்திப்பேறும்

சிவத்திரு வ. குமாரசாமி ஐயர் அவர்கள்



அஸ்வமேத யாகத்தைப் பூர்த்தி செய்தபின்னர் பாண்டவர்கள் எவ்வித குறையுமின்றி நாட்டைப் பரிபாலித்து வந்தனர். குடிமக்களை தர்மவழியில் ஒழுகச் செய்து அன்புடன் நடாத்தி, கண்ணை இமை காப்பது போன்று காத்து வந்தனர். எக்காரியத்தையும் திருதராஷ்டிர மன்னனின் அனுமதி கேட்டுச் செய்து வந்தனர். புதல்வர்களை இழந்து கவலைப்படும் திருதராஷ்டிர னுக்கும் காந்தாரிக்கும் மனம் கோணாத வாறு தாமே பணிவிடைகளைச் செய்து அவர்களை அமைதிப்படுத்தினர். இவ் வாறு பதினைந்து வருடங்கள் சென்றன.

ஒருநாள் திருதராஷ்டிர மன்னன் பாண்டவர்களை நோக்கி "புதல்வர்களே

உனது மனச்சாட்சியே உனது விழிப்புணர்வு.

நான் உங்களுடன் வெகுகாலம் வாழ்ந்து விட்டேன். நீங்களும் எனது மனம் கோணாத வகையில் நன்றாகப் பணிவிடை செய்திருக்கிறீர்கள். இனி எமது குலமரபின் படி நான் தவவாழ்வை மேற்கொள்ள முடிவு செய்துள்ளேன். ஆகவே வனம் சென்று தவம் செய்வதற்கு எனக்கு விடைதரவேண்டும்" என்று வேண்டிக்கொண்டான். இவ்வேளையில் அங்கே வியாசமகரிஷியும் வந்து சேர்ந்து கொண்டார். திருதராஷ்டிர மன்னனின் வேண்டுகோளைச் செவிமடுத்த யுதிஷ்டிரர் மௌனமாக சோகமே உருவெடுத்த நிலையில் அமர்ந்திருந்தார். யுதிஷ்டிரரின் மனநிலையைப் புரிந்து கொண்ட வியாசமகரிஷி, யுதிஷ்டிரரை நோக்கி, "யுதிஷ்டிரரே திருதராஷ்டிர மன்னனின் மனவிருப்பின்படி நீ நடந்து கொள். வயது முதிர்ந்த நிலையில் மனத்துயருடன் அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். எனவே அவர்கள் அமைதி வேண்டித் தவவாழ்வை மேற்கொள்வதே நன்மையளிக்கும்" என்று கூறினார். வியாசரின் உரைகளால் மனத்தெளிவு பெற்ற யுதிஷ்டிரரும் மன்னனுக்குக் கானகம் செல்ல அனுமதியளித்தார்.

யுதிஷ்டிரர் அனுமதியளித்ததும் மகிழ்வடைந்த திருதராஷ்டிரமன்னன் "யுதிஷ்டிரா அறத்தை முதன்மைப்படுத்தி அரசோச்ச வேண்டும் சான்றோர்கள் கூறும் அறிவுரைகளைச் செவிமடுத்து அதன்படி நடந்துகொள். புலனடக்கத்தை உறுதியாகக் கைக்கொண்டொழுக வேண்டும். சேமித்து வைத்திருக்கும் செல்வம் பயன்படுவது போன்று, புலனடக்கம் மிக்க பயன்தரவல்லது. ராஜ்ய பரிபாலனத்தில் தக்கோரைத் தெரிவுசெய்து உன்னுடன் இணைத்துக் கொள். நம்பிக்கை மிக்கவர்களிடமே பொறுப்புக்களை ஒப்படை. நல்லவர்கள், நம்பிக்கையானவர்களை நிதானமாக அறிந்து வைத்துக்கொள். இம்மையிலும் மறுமையிலும் மேலான பலன் கிட்டும் வகையில் மன்னன் நடந்து கொள்ள வேண்டும். குடிமக்களை அறவழியில்க் காப்பாற்றும் மன்னனுக்கு இம்மையில்ப் புகழும் மறுமையில் நற்பேறும் கிடைக்கும்" என்பன போன்ற புத்திமதிகளைத் தருமருக்கு எடுத்துரைத்து தருமரை ஆசீர்வதித்தான். யுதிஷ்டிரர் "அரசே தாங்கள் கூறிய அறிவுரைகளைக் கைக்கொண்டொழுகுவேன்" என்று அவருக்கு பதில் உரைத்தார்.

## வனம் செல்லுதல்

மறுநாட்காலை பொழுது புலர்ந்தது. கர்மானுஷ்டானங்களை முடித்த திருதராஷ்டிர மன்னன், காந்தாரியுடன் வனம் செல்லத் தயாரானான். பாண்டவர்கள் அவர்களை அணுகி விடை கொடுக்க வந்து சேர்ந்தனர். அவர்களை ஆசீர்வதித்து எல்லோரிடமும் விடை பெற்று சென்ற பொழுது யுதிஷ்டிரர் மயக்கமுற்று கீழே சாய்ந்தார். மற்றும் உள்ள எல்லோரும் குரலெடுத்துக் கதறத் தொடங்கினர். நகர மாந்தர் மன்னனைத் தொடர்ந்து அழுதவண்ணம்

மனிதர்களுக்கு நல்ல அணிகலன் பொறுமை.

சென்றனர். அரச குலத்தவரும் அவரைப் பின்தொடர்ந்து கண்களில் நீர் பெருகப் புலம்பியவராய் மன்னனைப் பின் தொடர்ந்தனர். இவ்வேளை பாண்டவர்களின் அன்னை குந்திதேவியும் திருதராஷ்டிரனுடனும் காந்தாரியுடனும் தானும் வனம் செல்ல முடிவுசெய்து அவர்களுடன் செல்லலானாள். பாண்டவர்கள் தடுத்து நிறுத்திப் புலம்பினர். ஆயினும் அவள் தனது முடிவை மாற்றிக்கொள்ளவில்லை. அரண்மனை மகளிர் எல்லோரும் மேலும் கலக்க முற்று அழத்தலைப்பட்டனர். ஆயினும் திருதராஷ்டிர மன்னனும், காந்தாரியும், குந்திதேவியும் தமது முடிவை மாற்றிக் கொள்ளாது வனத்தை நோக்கிச் சென்றனர்.

## மூவரின் முடிவு


திருதராஷ்டிர மன்னனும் தன்னை விட்டுச் சென்றதும் யுதிஷ்டிரரின் மனோநிலையில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. அவரும் துறவு மனப்பான்மை கொண்டவராய்த் தன் கடமைகளை நிறைவேற்றிக் கொண்டிருந்தார். மனதிலே கவலை வளர்ந்து மிகவும் உளம் வாடிய நிலையில் பற்றுக்களைத் துறக்கும் காலத்தை எதிர்பார்த்து காத்திருந்தார். இந்நிலையில் ஒருநாள் நாரதமகரிஷி பாண்டவர்களின் அரசவைக்கு வந்து சேர்ந்தார். நாரதரின் வருகையால் மனம்களித்த யுதிஷ்டிரர் அவரை வரவேற்றுப் பூஜித்து ஆசனமளித்து அமரச்செய்து மகிழ்ந்தார். பின்னர் நாரதமகரிஷியை நோக்கிச் "சுவாமி, தாங்கள் எங்களுக்குத் தரிசனம் தந்து வெகுகாலம் ஆகிவிட்டது. இன்று தங்களது தரிசனம் கிடைத்தமையால் பெரிதும் உவகை கொண்டோம். தங்களுக்கு நாங்கள் யாது செய்யவேண்டும்? தாங்கள் வந்த நோக்கம் யாது? தயவுசெய்து கூறியருள வேண்டும்" என்று வினயமாக வினாவி நின்றார்.

''அரசே உன்னைக் கண்டு வெகுகாலமாயிற்று அதனால் உன்னைச் சந்தித்து அளவளாவும் பொருட்டு இங்கு வந்தேன். கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களில் நீராடித் தபோவனத்தில் இருந்து இங்கு வருகிறேன்" என்று நாரதர் விடை பகர்ந்தார். இதனைச் செவிமடுத்த யுதிஷ்டிரர், ''சுவாமி எனது பெரிய தந்தையாரும் பெரிய அன்னையும் எமது அன்னையும் தபோவனத்தில் தவமியற்றி வருகிறார்கள். அவர்கள் நலமாக இருக்கிறார்களா? அவர்களைச் சந்தித்தீர்களா? அன்னையர் இருவரும் வயது முதிர்ந்த நிலையில் எப்படி இருக்கிறார்கள்?" என்பன போன்ற வினாக்களைத் தொடுத்தார் யுதிஷ்டிரர். யுதிஷ்டிரரின் வினாவை அடுத்து நாரதர் "மன்னா! தபோவனத்தில் நடந்தவற்றைக் கூறுகிறேன். மன்னன் திருதராஷ்டிரனும் உமது அன்னையரும் கடும் தவம் புரிந்து கொண்டிருந்தனர். இவ்வேளையில் அவர்கள் வனத்தில் இருந்த போது பெரும்காட்டுத்தீ அவர்களை நாற்புறமும் சூழ்ந்து கொண்டது. அவர்களால் தப்பிச் செல்லமுடியவில்லை.

புண்ணியம் செய்யாவிட்டாலும் பாவம் செய்யாமலிரு.

எனவே வழிபுரியாத அவர்கள் கிழக்கு முகமாக உட்கார்ந்து தவத்தில் ஈடுபட்டனர். காட்டுத்தீயுடன் கலந்து அவர்கள் மேலான சொர்க்கத்தை அடைந்தனர். மன்னா இதற்காக நீ கவலைப்பட வேண்டாம். அவர்கள் மூவரும் சொர்க்கத்தில் இருக்கிறார்கள்." என்று நாரதர் கூறியவற்றைச் செவிமடுத்த பாண்டவர்கள் பெரிதும் துன்பமடைந்தனர். "என்னே கொடுமை கொடுமை" என்று வாய்விட்டு அழுது புரண்டனர். எல்லோரும் துயரக்கடலில் மூழ்கினர். அரண்மனையும் நாடும் சோகமாய்க் காட்சியளித்தது. ஒருவாறு மனம் தேறியவராய் யுதிஷ்டிரர் சகோதரர், விதுரர் முதலானோருடன் கங்கைக் கரையை அடைந்து மூவருக்கும் முறைப்படி நீர்க்கடன் செய்து கருமங்களை நிறைவேற்றி அஸ்தினாபுரிக்கு மீண்டார்.

(தொடரும்..




20-05-2005 வெள்ளிக்கிழமை நடைபெற்ற வைகாசிப்பெருவிழாவின்போது சிறப்புரை ஆற்றவந்த ஞானபண்டித சேவாசுரபி வைத்திய கலாநிதி கதிரவேற்பிள்ளை அவர்களும், சிறப்புச் சொற்பொழிவுக்காக வருகை புரிந்த ஆங்கில போதனாசிரியர் ச. விநாயகமூர்த்தி அவர்களும், பெரியபுராணத் தொடர் சொற்பொழிவு ஆற்றுவதற்கு வருகை புரிந்த சிரேஷ்ட விரிவுரையாளர் அ. குமாரவேல் அவர்களும் கலந்துகொண்ட நிகழ்வினை மேலுள்ள படங்களில் காணலாம்.

உ

# சந்நிதியான்

திரு ந. அரியரத்தினம் அவர்கள்



(தொடர்ச்சி...

**செல்வி** சி. செல்வரோசா, அம்மையார் ஆகிய இருவரையும் நோக்கி நடந்து வந்த இளைஞன் இவர்கள் எதிர்பார்த்தது போல இவர்கள் இருக்கும் இடத்தை வந்தடைந்தான். இவர்கள் இருவரிடமும் வந்து சேர்ந்த அந்த இளைஞன் நீங்கள் எங்கேயிருந்து வந்துள்ளீர்கள் என்பன தொடர்பான விபரங்களை இவர்களிடமிருந்து அறிந்துகொண்டான். பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த அந்த இளைஞன் மிகவும் பண்பான முறையிலும் இன்முகத்துடனும் இவர்களுடன் நடந்து கொண்டது அம்மையாருக்கும்

செல்வரோசாவுக்கும் மனதிற்கு ஆறுதல் அளிப்பதாக இருந்தது.

செல்வி சி. செல்வறோசா சந்நிதியிலிருந்து கதிர்காமத்திற்கு புறப்படுகின்றபொழுது கதிர்காமத்தில் தனது நேர்த்திக்கடனை நிறைவேற்றுதல், கதிர்காமக்கந்தனை மனம்குளிர வழிபாடு செய்தல் ஆகிய காரியங்கள் முடிவடைந்தவுடனேயே அங்கிருந்து திரும்பி விடுவதென்ற முடிவுடன்தான் சென்றிருந்தார். இதற்கிணங்க கதிர்காமத்தில் திங்கட்கிழமை சாயரட்சப் பூசைக்கு முன்பே தனது தலைமுடியின் ஒருபகுதியைக் கத்தரித்து மாணிக்க கங்கையில் நீராடி கந்தக்கடவுளது ஆலயத்திற்கு வந்து மாலைப் பூசையில் கந்தக்கடவுளை தரிசிப்பதற்காகக் காத்து நின்றார்கள்.

08.11.2004 திங்கட்கிழமை மாலைநேரம் பூசையின் பொழுது அடியார்கள் அதிகமாகவே காணப்பட்டனர். அடியார்கள் நிறைந்திருந்தமையாலும் புதிய இடமாக இருந்ததாலும் பூசையை, தீப ஆராதனைகளை முழுமையாகக் கண்டு களிப்பதில் பல பிரச்சனைகளை இவர்கள் இருவரும் எதிர்நோக்க வேண்டியிருந்தது. ஆனாலும் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த அந்த இளைஞன் குறிப்பறிந்து நேரம் அறிந்து இவர்களுக்கு பொருத்தமான இடங்களில் நின்று வழிபாடு செய்வதற்கும், திருநீறு போன்ற பிரசாதங்களை அந்த நெருக்கடியின் மத்தியிலும் பெற்றுக் கொடுத்தல் போன்ற செயற்பாடுகளுக்கும் பல்வேறு உதவிகளை செய்து கொண்டிருந்தான்.

இவ்வாறு கதிர்காமக்கந்தனது பூசையை நிறைவான முறையில் காண்பதற்கும் வழிபாடு செய்வதற்கும் இவர்களுக்கு அந்த இளைஞன் முழு உதவிகளையும் செய்து கொடுத்தான். பூசை முடிவடைந்தபின் உடைத்த தேங்காயினுள் திருநீறு புஸ்பங்கள் என்பவற்றை வைத்தும், அதைவிட காளாஞ்சி வழங்குவதைப் போன்று பழங்கள் பூமாலை என்பவற்றுடன் இன்னொரு பிரசாதத்தையும் இவர்களிடம் வழங்கியதால் அன்றைய மாலைப் பூசையின் உபயகாரர் தாங்கள் தானோ என்று நினைக்கும் அளவுக்கு இவர்களுக்கு திருப்தி ஏற்பட்டது.

கதிர்காமக்கந்தனது பூசை நடைபெறுகின்ற நேரம் அந்தப் பூசையைக் கண்குளிரக் கண்டு வழிபாடு செய்ய வேண்டுமென்று எதிர்பார்ப்புடன் சந்நிதியில் இருந்து தலயாத்திரைக்குப் புறப்பட்ட செல்வறோசாவுக்கு தனது விருப்பம் முழுமையாக நிறைவேறிய திருப்தியில் கதிர்காமக்கந்தனது ஆலயத்தில் நின்று ஆனந்தக் கண்ணீர் சொரிய அவனது நாமங்களை உச்சரித்தவாறு அவனுக்கு நன்றி செலுத்தி அவனது திருவருளை வியந்து வழிபாடு செய்து கொண்டிருந்தார்கள்.

இவ்வாறான ஒரு பக்திநிலையில் செல்வறோசா மூழ்கியிருக்கும் பொழுது ஏற்கனவே அவர்களுக்கு எல்லாவித உதவிகளையும் கேட்காமலே குறிப்பறிந்து உதவிய அதே இளைஞன் பிரகாசிக்கின்ற புத்தம் புதிய ஒரு வேலுடன் தனக்கு அருகாமையில் நிற்பதை உணர்ந்து கொண்டார். அதுமட்டுமல்ல அந்த இளைஞன்

இந்தாருங்கள் இது உங்களுக்குத்தான் என்று கூறியவாறு அந்த புத்தம் புதிய ஒளி வீசுகின்ற வேலை செல்வறோசா விடம் கையளித்தான்.

நடந்து கொண்டிருக்கின்ற இந்தச் சம்பவங்கள் நிஜமாகத்தான் நடக்கின் றனவா என்ற சந்தேகம் செல்வி சி. செல்வறோசாவுக்கு ஏற்பட்டது. தன்னைச் சுதாகரித்தவாறு நிதானமாகச் சிந்திக்கலானார். தான் கதிர்காமத்திற்கு வந்தது தொடக்கம் தற்பொழுது தனது கைகளில் வேல் கிடைத்துள்ளது வரை உள்ள அனைத்துச் சம்பவங்களையும் ஒருமுறை மனதில் மீட்டுப்பார்த்தார்கள். இவை அனைத்தும் நிஜமாகவே நடந்து கொண்டிருக்கிறது. என்பதை செல்வி செல்வறோசா உறுதிப்படுத்திக் கொண் டாலும் இவை எல்லாம் இயல்பாக எவருக்கும் நடக்க முடியாதவை என் பதை அவரால் நன்கு உணரமுடிந்தது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக ஏறத்தாழ இரண்டரை அடி நீளமான பார்ப்போரது உள்ளங்களைக் கவரக் கூடிய கதிர்காமக்கந்தனது வேல் ஒன்றும் தற்பொழுது தனது கைகளில் காணப்படுகிறது. என்பது அவரை பக்தியின் உச்சநிலைக்கு கொண்டு சென்றுவிட்டது. ஆனாலும் அந்தவேலை இளைஞனிடம் பெற்றுக்கொண்ட செல்வறோசா அதனைப் புனிதமாகவும் பாதுகாப்பாகவும் சந்நிதிக்கு எடுத்துச் செல்வதற்கும் பேணுவதற்கும் தன்னை விடப் பொருத்தமானவர் அம்மையார் என்பதை உணர்ந்து கொண்டவராய் அதனை அம்மையாரிடம் கையளித்தார்.

சந்நிதியானுடைய அருட்கடாட் சத்திற்கு உட்பட்டு சந்நிதியானுடைய நினைவுடனேயே வாழ்ந்து கொண்டிருக் கின்ற அம்மையாரிடம் செல்வறோசா வேலினைக் கையளித்தபொழுது அவரது உடல் புல்லரித்தது. உள்ளம் பக்தி உணர்வினால் அலைமோத தன்னை மறந்த நிலையில் முருக நாமங்களை உச்சரிக்கத் தொடங்கினார்.

இவ்வாறான பக்திப்பரவசத்துடன் செல்வறோசாவும் அம்மையாரும் அன்று இரவுப் பொழுதை கதிர்காமத்தில் கழித்தபின் அடுத்தநாள் காலையிலேயே கதிர்காமத்திலிருந்து சந்நிதிக்கு புறப் பட்டு வழியில் எங்குமே ஓய்வு எடுக்காது புதன்கிழமை பிற்பகல் சந்நிதியை வந்தடைந்தனர்.

தாம் பெற்றுக்கொண்ட வேலினை புனிதமாக சந்நிதிக்கு கொண்டு செல்லவேண்டுமென்ற ஆர்வத்தால் தொடர்ச்சியாகப் பிரயாணம் செய்து சந்நிதியை வந்து சேர்ந்த நிலையில் இங்கே அவர்களை வரவேற்பது போல பூசைமணி ஒலித்துக்கொண்டிருந்தது. இது அவர்களுக்கு பெரிய மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அதுமட்டுமல்ல அன்று புதன்கிழமை கந்தபுராணத்தின் இறுதிப் படிப்பும் வள்ளி அம்மன் திருமணத்திற் குரிய திருமண நிகழ்வுகளும் சந்நிதியில் நடை பெற்றுக் கொண்டிருந்தன. செல்வச் சந்நிதியில் வள்ளியைக் கரம்பிடிப்பதற்கு முருகப்பெருமான் வேல்வடிவில் கதிர் காமத்திலிருந்து வந்துள்ளார் என்ற உணர்வையே இது அங்கிருந்த அனை வருக்கும் ஏற்படுத்தியது.

இவ்வாறு கதிர்காமத்திருந்து கொண்டுவரப்பட்ட அந்த வேலினை

பணம் வருமுன் செலவுகளை உண்டாக்காதே.

சிலநாட்கள் மூலஸ்தானத்தில் வைத்து அதற்கு புனிதத்தை ஏற்படுத்தினாலும் அதனை அம்மையாருடைய வீட்டிலேயே வைத்துப் பேணுமாறு மீண்டும் அம்மையாரிடம் பூசகர்கள் அந்த வேலினைக் கையளித்துள்ளனர். ஏற்கனவே சந்நிதியான் உலாவுகின்ற புனிதமான இடமாகக்கருதப்படும் அம்மையாரின் சுவாமி அறையில் அந்த வேல் மிகவும் புனிதமான முறையில் தற்பொழுது வைத்து பேணப்பட்டு வருகிறது.

மருதர் கதிர்காமர் பரம்பரையில் வந்த இந்த இரு பெண்களது கதிர்காம யாத்திரை தொடர்பான முழுவிடயங்களும் உண்மையில் அற்புதமான விடயங்களாகவே இடம்பெற்றுள்ளன. இவர்களுக்கு வேல் கிடைத்த முறையும் வேலை வழங்கிய இளைஞன் தொடர்பான விடயங்களும் யாருக்கும் விளங்காத புதிராகவே உள்ளது. கதிர்காமத்தில் இவர்களை ஆதரித்து உதவிகள் செய்த தெய்வானை அம்மன் ஆலயப் பூசகரே இந்த இளைஞனை உங்களுக்கு எவ்வாறு தெரியும் எப்போது அறிமுகமானீர்கள் நான் இந்த இளைஞனை என்றுமே காணவில்லையே என்று தனது ஆதங்கத்தை இந்த இரு பெண்களிடமும் வெளிப்படுத்தியுள்ளார்.

ஆம் சூரனை சங்காரம் செய்த முருகப்பெருமான் முதியவர் வேடத்தில் சென்று வள்ளியை ஏமாற்றி லீலைகள் செய்து திருமணம் செய்து திருவிளையாடல் செய்தது போல இங்கே செல்வரோசாவின் கதிர்காம யாத்திரையின் பொழுதும் செல்வச் சந்நிதிக்கு முதியவர் உருவில் வந்த முருகப் பெருமான் அவரை கதிர்காமம் வருமாறு அழைத்து விட்டு கதிர்காமத்தில் ஒரு சாதாரண இளைஞன் வடிவில் வந்து எல்லா உதவிகளையும் செய்து தனது திருவிளையாடலை நடாத்தி உள்ளார்.

மேலும் அம்மையார் உடன்படாத காரணத்தால் தனது தலை முடியின் ஒரு பகுதியை மட்டும் கதிர்காமத்தில் கத்தரித்த செல்வரோசா இங்கேவந்த பின்பு தான் நேர்த்தி வைத்தபடி தனது முழு முடியையும் கதிர்காமக்கந்தனுக்காய் இறக்கி தான் ஒரு இளம் பெண்ணாக இருந்தும் தனது தலயாத்திரை தொடர்பாக நினைத்தவற்றை முழுமையாக நிறைவு செய்த திருப்தியுடன் சந்நிதியில் வாழ்ந்து கொண்டிருப்பதையும் இவ்விடத்தில் குறிப்பிடுதல் பொருத்தமானது.

இது பற்றி செல்வரோசா அடியேனிடம் கூறும்பொழுது ஒரு பெண்ணுக்கு தலைமுடி அவசியமான தொன்றே அதுவும் திருமணம் செய்யாத ஒரு இளம்பெண்ணைப் பொறுத்தவரை தலைமுடி என்பது மிகவும் முக்கியமானதென்பதை அனைவரும் அறிவார்கள் என்பதை எடுத்துக் கூறினார்கள். ஆனால் சந்நிதி முருகனது கருணைக்கு ஈடாக இந்த உலகில் எதனையுமே உணர முடியாத நிலையில் சந்நிதி முருகனது அடிமையாக என்னை ஆக்கிக்கொண்ட பின் அவனுக்கு நேர்த்தி வைத்து எனது தலைமுடியை இறக்குவதை எனது வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த பெரும் பேறாகவே கருதுகின்றேன்.

எனக்குறிப்பிட்டார். மேலும் மருதர் கதிர்காமரை கதிர்காமத்திற்கு அழைத்துச்சென்றது போல எம்மையும் கதிர்காமத்திற்கு அழைத்து பல திருவிளையாடல்களை நிகழ்த்திய முருகப்பெருமான் எமக்கெல்லாம் துணையாக இருக்கும் பொழுது எமது வாழ்க்கைப் பயணத்தைப் பற்றியோ அல்லது தலைமுடியைப் பற்றியோ நாம் ஏன் சிந்திக்கவேண்டும் என்ற இறைநம்பிக்கை தொடர்பாக அந்த ஆழமான கருத்தை இளம் பெண்ணான செல்வி சி. செல்வறோசா அடியேனுடன் உரையாடும் பொழுது மிகவும் சாதார ணமாக வெளிப்படுத்தினார்கள்.

ஆம் சந்நிதியானது திருப்பாதங் களை சிக்கனப்பிடித்து எமது வாழ்க்கை யின் சிக்கல்களிலிருந்து எம்மை விடுவிப்போமாக.

ஓம் முருகா!



எதிர்வரும் கதிர்காம உற்சவத்தையொட்டி ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத் திலிருந்து புறப்படும் பாத யாத்திரையை முன்னெடுத் துச்செல்லும் பற்றிக் கரிகன் 11-05-2005 காலை சந்நிதி யான் ஆச்சிரமத்தில் இருந்து கதிர்காம பாதயாத்திரையை ஆரம்பிக்கும் காட்சி.

அதிகாரத்தை விரும்பிச் சுதந்திரத்தை இழக்காதே.

உ

(தொடர்ச்சி..

## 01-08-2004இல் இருந்து

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| ஸ்ரீநதியா நகைமாடம் - ஸ்ரான்லிவீதி | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| T. தியாகலிங்கம் (S.V.M) | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| திருவுடையான் | லண்டன் | 15,000. 00 |
| V. வையாபுரி - கனடா | | 1மூடை அரிசி |
| நடேசமூர்த்தி பிரசாந் - தோப்பு | அச்சுவேலி | 2000. 00 |
| வை. சிவசுப்பிரமணியம் - வைமன்வீதி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| T. இரட்ணபாலன் | லண்டன் | 15,000. 00 |
| க. சபாபதிப்பிள்ளை | அவுஸ்திரேலியா | 3000. 00 |
| மல்லிகாதேவி ஸ்ரீதரன் | கனடா | 5000. 00 |
| செ. குணபூசணி | ஜேர்மன் | 10,000. 00 |
| பொ. சுகந்தன் - கன்னாதிட்டிலேன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| சி. முருகதாஸ் - இரும்புமதவடி | வதிரி | 1மூடை அரிசி |
| ஸ்ரீதரன் அமிலஷா | பிரான்ஸ் | 5000. 00 |
| ஜெயதரன் பிரவிந் | வல்வெட்டித்துறை | 10,000. 00 |
| மு. ஞானவேல் | சுழிபுரம் | 10,000. 00 |
| ஐ. கந்தையாபிள்ளை - கரணவாய் கிழக்கு | | 1மூடை அரிசி |
| சதாசிவமூர்த்தி மூலம் அருண் அன்பழகன் | கனடா | 5000. 00 |
| ராசராகுலன் | சுண்ணாகம் | 3000. 00 |
| நல்லையா அழகம்மா | மாரீசன்கூடல் | 1000. 00 |
| திருமதி தர்மலிங்கம் - இமையாணன் | உடுப்பிட்டி | 1000. 00 |
| செ. சக்திதரன் - புதுச்செட்டிதெரு | கொழும்பு | 2000. 00 |
| பொன்னையா ரமணன் - புதுச்செட்டிதெரு | கொழும்பு | 5000. 00 |
| மங்கையர்க்கரசி பொன்னையா - புதுச்செட்டிதெரு | கொழும்பு | 5000. 00 |
| சுவாமி அருளானந்தா | ஆந்திரா | 15,000. 00 |
| ச. நவரெத்தினராசவேல் ஆசிரியர் | புத்தூர் | 1000. 00 |
| இராஜேந்திரா (V.S.B) | | 1500. 00 |
| பொ. இரத்தினசோதி | தம்பசெட்டி | 3000. 00 |
| வ. விதுஷன் | புலோலி கிழக்கு | 1000. 00 |
| S. யோகராசா | அவுஸ்திரேலியா | 3000. 00 |
| த. தீனதயாள் - மருதடிவீதி | நல்லூர் | 3000. 00 |
| K. இரத்தினம்மா - மல்வம் | உடுவில் | 1000. 00 |

அன்பையும் வாசனையையும் மறைக்க முடியாது.

| | | |
|---|---|---|
| தி. தவபாக்கியராசா(பாக்கி) - | அச்சுவேலி | 2மூடை அரிசி |
| து. சிவஞானச்செல்வம் - புளியங்கூடல் | ஊர்காவற்துறை | 3மூடை அரிசி |
| வே. ஆனந்தமயில் | பொலிகண்டி | 5000. 00 |
| K. ருஷானி | தொண்டைமானாறு | 3000. 00 |
| S. ஸ்ரீஸ்கந்தராசா (நவிண்டில்) | கொழும்பு | 2000. 00 |
| செ. பாலசிங்கம் - உடுவில் | சுண்ணாகம் | 2000. 00 |
| A. ஞானசேகரம் - சிட்னி | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| மைதிலி நிரஞ்சன் | கரணவாய் | 1000. 00 |
| Dr. சிறீஸ்கந்தராசா -புவப்பிட்டி | அவிசாவளை | 1000. 00 |
| கி. சிவப்பிரகாசம் | புலோலி | 3000. 00 |
| திரு சண்முகநாதன் | டென்மார்க் | 10,000. 00 |
| செ. பத்மநாதன் | வியாபாரிமூலை | 5000. 00 |
| சோ. தண்டபாணிகதேசிகர் மாதவன் | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| ஆ. விநாயகமூர்த்தி - சாளம்பை | கரணவாய்மத்தி | 1000. 00 |
| கஜன் - இருபாலை (சத்தணவுத் திட்டவகையில்) | | 25,000. 00 |
| செல்வி ச. ஸ்ரீரங்கநாயகி - தாதி உத்தியோகத்தர் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| ப. விக்னேஸ்வரன் குடும்பம் | ஏழாலை கிழக்கு | 1000. 00 |
| சுந்தரலிங்கம் - புளுமென்டல் றோட் | கொழும்பு | 2000. 00 |
| செல்வி அபிராமி தங்கேஸ்வரன் | கொழும்பு | 1100. 00 |
| திருமதி சி. சிவகாமிப்பிள்ளை - அரசடி | சாவகச்சேரி | 5000. 00 |
| N. பரமானந்தமூர்த்தி | கனடா | 10,000. 00 |
| ரமேஸ்வரன் | மீசாலை | 1000. 00 |
| இ. பத்மராசா | வறணி வடக்கு | 2000. 00 |
| S. ஞானரெத்தினம் | சுழிபுரம் | 500. 00 |
| S. கிருபாகரன் | சுழிபுரம் | 500. 00 |
| மு. ஞானவேல் | சுழிபுரம் | 5000. 00 |
| ஸ்ரீஸ்கந்தராசா இராஜேந்திரம் | லண்டன் | 1000. 00 |
| நடராசா பாக்கியம் | | 500. 00 |
| அ. கமலதாசன் | கல்வியங்காடு | 1500. 00 |
| பாலசுந்தரம் மூலம் (அரியாலை) சி. சந்திரமோகன் | | 10,000. 00 |
| ர. ரங்கன் தேசிகன் | லண்டன் | 50பவுண் |
| கனகம்மா குடும்பம் (தம்பசெட்டி) | லண்டன் | 100பவுண் |
| அ. உத்தரகுணசீலன் | லண்டன் | 1500. 00 |
| நல்லதம்பி ஆறுமுகம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| கி. நல்லம்மா - இடைக்காடு | அச்சுவேலி | 1000. 00 |

(தொடரும்..

உ

# வருடாந்த வைகாசிப் பெருவிழா – 2005

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் வருடம் தோறும் நடாத்தப்படும் வைகாசிப் பெருவிழா 20-05-2005 வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. வழமைபோல ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் விஷேடமாக இடம் பெற்ற அபிஷேக நிகழ்வுடன் ஆரம்பமாகியது. பேரவைத்தலைவர் திரு க. அருள்லிங்கம் அவர்கள் தலைமைதாங்கி விழா நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார்கள். விழா தொடர்பாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியும் வைத்திய கலாநிதியும் ஞானபண்டித சேவாசுரபியுமாகிய சி. கதிரவேற்பிள்ளை அவர்களும், யாழ் பல்கலைக்கழக ஆங்கிலபாடப் போதனாசிரியரும் சிறந்த சமயச் சொற்பொழிவாளருமான திரு ச. விநாயகமூர்த்தி அவர்களும் சிறப்புச் சொற்பொழிவுகளை வழங்கினார்கள். வைத்திய கலாநிதி சி. கதிரவேற்பிள்ளை அவர்கள் எமது சமயத்தின் தொன்மையையும் சிறப்பையும் எடுத்துக்காட்டினார்கள். சமயம் என்பது தூய்மை யானதாகவும், உண்மையானதாகவும் இடம்பெறவேண்டியதன் அவசியத்தை எடுத்துக்காட்டினார்கள். சமயத்தை வழிநடாத்தும் ஆலயம் தொடர்பானவர்கள் சரியாக நடந்து கொள்ளவேண்டுமென்றும் விநயமாகக் கேட்டுக் கொண்டார்கள். திரு ச. விநாயகமூர்த்தி அவர்கள் கந்தபுராணம் தொடர்பாக முருகப்பெருமானது பெருமைகளையும் சிறப்புக்களையும் வெளிப்படுத்தும் வகையில் "ஆயவும் வேண்டும் கொல்லோ" என்ற தலைப்பில் தனது சொற்பொழிவினை நிகழ்த்தினார்கள் கச்சியப்ப சிவாச்சாரியார் முருகப்பெருமானது சிறப்பையும், பெருமையையும் பல சந்தர்ப்பங்களில் மிகவும் ஆழமாக வெளிப்படுத்தியிருப்பதை பாமரமக்களும் விளங்கிக்கொள்ளும் வகையில் அடியார்களுக்கு பக்திச்சுவை சொட்டச்சொட்ட எடுத்து விளக்கினார்கள். சூரபத்மன் சாதாரணமானவன் அல்ல மிகவும் சிறப்புப்பெற்றவன். அவன் முருகப்பெருமானுடன் யுத்தம் செய்தகாரணத்தால் அவனுடைய சிறப்பு மேலும் மேன்மையடைந்துள்ள நிலையையும் எடுத்துக்காட்டினார்கள். சந்நிதியான் ஆச்சிரமத்தினால் சத்துணவு வழங்கப்படும் இரண்டு முன்பள்ளிகளின் ஆசிரியர்களை அவர்களது சேவையினை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டதுடன் சுயதொழில் முயற்சிக்காக ஒரு குடும்பப் பெண்ணுக்கு ஒரு தொகைப்பணமும் நன்கொடையாக வழங்கப்பட்டது. சந்நிதியான் ஆச்சிரமத்தின் சமூகத்தொண்டின் ஓர் அங்கமாக முருகப்பெருமான் உதித்த வைகாசி விசாகதினத்தினை சிறப்பிக்கும் வகையில் மேற்படி துவிச்சக்கர வண்டிகளும் பணத்தொகையும் வழங்கப்பட்டது.

வருடந்தோறும் நடைபெறுகின்ற வைகாசிப் பெருவிழாவிற்கு நிதியுதவி வழங்கி எம்மை ஊக்கப்படுத்துகின்ற அன்பர்களை இச்சந்தர்ப்பத்தில் நினைவுகூருவதுடன் எமது வாழ்த்துக்களையும் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நமது பாவங்கள் நம்மைத் தண்டிக்கின்றன.

உ

# செய்திக் கொத்து

☞ செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் அமெரிக்கா மாநிலத்தில் நடைபெறும் ஆன்மீக விழாவையொட்டி பல நிகழ்வுகளில் பங்கேற்கும் முகமாக அமெரிக்கா பயணமானார்.


☞ இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கலாபூஷணம் விருது வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விருதுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தத்தம் பகுதியிலுள்ள பிரதேச செயலகங்களில் விண்ணப்ப படிவத்தை பெற்றுக் கொள்ளலாம்.

☞ அகில இலங்கை திருமுறை மன்றம் கடந்த சித்திரை மாதம் தொடக்கம் ஆலயங்கள் தோறும் பன்னிரு திருமுறைகளை முற்றோதல் செய்து வருகின்றது. அவ்வகையில் முதலாம் திருமுறை முற்றோதல் யாழ் நீராவியடி வீரகத்தி விநாயர் ஆலயத்திலும் இரண்டாம் திருமுறை சத்திரத்து ஞானவைரவர் ஆலயத்திலும் மூன்றாம் திருமுறை முற்றோதல் வில்லூன்றி விநாயகர் ஆலயத்திலும் நடைபெறும்.

☞ இந்த ஆண்டு முதியோர் தினத்தையொட்டி முதியோர்கள் தொடர்பான கட்டுரைகள் அடங்கிய சஞ்சிகை ஒன்று வெளியிடப்படவுள்ளது. கட்டுரைகளை அனுப்பவிரும்புவோர் பிரதேச செயலகங்களிலுள்ள சமூக சேவை உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

☞ வல்வெட்டித்துறை தீருவில் வயலூர் முருகன் ஆலய மகாகும்பாபிஷேகப் பெருவிழா 10-06-2005 வெள்ளிக்கிழமை மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

☞ அறநெறிக் கல்விப் போதனைக்காக தனியார் கல்வி நிறுவனங்களை ஒரு நாளாவது மூடுமாறு உடுப்பிட்டி கல்யாண சுந்தர அறநெறிப் பாடசாலையின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவின் போது கோரிக்கை விடப்பட்டுள்ளது.



சமரசம் கண்டவனே மனிதன். பலரும் ஒருதலைப்பட்சமானவர்கள். ஆனால் நான் எல்லாவற்றையும் ஒன்றாகவே காண்கிறேன். சாக்தம், வைணவம், வேதாந்தம் எல்லாம் அந்த ஒரே இறைவனையே நோக்கமாகக் கொண்டவை. யார் உருவமற்றவரோ அவரே உருவத்துடன் விளங்குகிறார், பல உருவங்களும் அவருடையதே. *-ஸ்ரீ ராமகிருஸ்ணர்-*

அறிவாளரைப் போல எழுது, பாமரன் போல பேசு.

உ

# ஆடிமாத வாராந்த நிகழ்வுகள்

*01-07-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்*

**சொற்பொழிவு:- "மந்திரங்கள்"**

வழங்குபவர்:- செஞ்சொற்செல்வன் இரா. செல்வவடிவேல்
(ஆசிரியர்)

---

*08-07-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்*

**சொற்பொழிவு:- "வாழ்த்தி வணங்குவோம்"**

வழங்குபவர்:- இ. சண்முகசுந்தரம்
(ஆசிரியர் கர. விக்னேஸ்வராக் கல்லூரி)

---

*15-07-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்*

**மாணவர்கள் நிகழ்வு**

*(மானிப்பாய் மருதடி அறநெறிப் பாடசாலை)*

---

*22-07-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்*

**சொற்பொழிவு:- பெரியபுராணம் (தொடர்)**

வழங்குபவர்:- அ. குமாரவேல்
(யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை)

---

*29-07-2005 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில்*

## ஞானச்சுடர் மாத வெளியீடு

## ஆடி 2005

வெளியீட்டுரை:- திரு கு. தியாகராஜசர்மா
(நீர்வைமணி)

மதிப்பீட்டுரை:- திரு சி. புண்ணியலிங்கம்
(இளைப்பாறிய பகுதித்தலைவர் யாழ் இந்துக்கல்லூரி)

# எதிர்காலம் இன்புற்றிருக்க எம்பெருமான் நல்லருள் நல்குவாராக

**ஜனவரி**
01.01.2005 மார்கழி 17 புதன்
மங்கள புத்தாண்டுஆரம்பம்.
14.01.2005 தை 1 வெள்ளி
தைப்பொங்கல்.
19.01.2005 தை 12 புதன்
கார்த்திகை விரதம்.
விசேட உற்சவம்.
25.01.2005 தை 12 செவ்வாய்
தைப்பூசம் பகல் விசேட உற்சவம்.

**பெப்ரவரி**
16.02.2005 மாசி 4 புதன்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
24.02.2005 மாசி 12 வியாழன்
மாசி மகம்.

**மார்ச்**
08.03.2005 மாசி 24 செவ்வாய்
மகா சிவராத்திரி இரவு
விசேட உற்சவம்
15.03.2005 பங்குனி 2 செவ்வாய்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
25.03.2005 பங்குனி 12 வெள்ளி
பங்குனி உத்தரம், வைரவப் பெருமான்
கும்பாபிஷேக தினம்.

**ஏப்ரல்**
03.04.2005 பங்குனி 21 ஞாயிறு
வருடாந்த சகஸ்ர மகா சங்காபிஷேகம்
காலை 8.00 மணி சங்குப்பூசை
பகல் 10.00 மணி சங்காபிஷேகம்
பகல் 11.00 மணி சண்முகார்ச்சனை
பகல் 12.00 மணி விஷேட உற்சவம்.
10.04.2005 பங்குனி 28 ஞாயிறு
ஆலய கும்பாபிஷேக தினம்.
11.04.2005 பங்குனி 29 திங்கள்
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்.
14.04.2005 சித்திரை 01 வியாழன்
மங்கள இந்துப் புதுவருடம் (பார்த்திப)
மாலை விஷேட உற்சவம்.
24.04.2005 சித்திரை 11 ஞாயிறு
சித்திரா பூரணை விரதம்.

**மே**
09.05.2005 சித்திரை 26 திங்கள்
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்.
23.05.2005 வைகாசி 4 திங்கள்
வைகாசி விசாகம், விஷேட உற்சவம்.

**ஜூன்**
05.06.2005 வைகாசி 22 ஞாயிறு
கார்த்திகை விரதம், விஷேட உற்சவம்.
13.06.2005 வைகாசி 31 திங்கள்
தீர்த்தமெடுப்பு
20.06.2005 ஆனி 6 திங்கள்
வருடாந்த குளிர்ச்சிப் பொங்கல்.

**ஜூலை**
02.07 .2005 ஆனி 18 சனி
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்.
06.07.2005 ஆனி 28 புதன்
கதிர்காமம் கொடி.

10.07.2005 ஆனி 26 ஞாயிறு
சின்ன ஆண்டியப்பன் பூசை.
13.07.2005 ஆனி 29 புதன்
ஆனி உத்தரம் பகல் விஷேட உற்சவம்.
22.07.2005 ஆடி 6 வெள்ளி
கதிர்காம தீர்த்தம்.
இரவு விஷேட உற்சவம்.
30.07.2005 ஆடி 14 சனி
கார்த்திகை விரதம் விஷேடஉற்சவம்.

**ஆகஸ்ட்**
04.08 2005 ஆடி 19 வியாழன்
ஆடியமாவாசை
05.08.2005 ஆடி 20 வெள்ளி
ஆலய மகோற்சவம் ஆரம்பம்
காலை 9.15 கொடியேற்றம்.
08.08.2005 ஆடி 22 திங்கள்
பகல் உற்சவம் ஆரம்பம்.
13.08.2005 ஆடி 25 சனி
பூங்காவனம்
14.08.2005 ஆடி 26 ஞாயிறு
கைலாயவாகனம்
17.08.2005 ஆவணி 1 புதன் சப்பறம்
18.08.2005 ஆவணி 2 வியாழன் தேர்
19.08.2005 ஆவணி 3 வெள்ளி
காலை தீர்த்தம், மாலை
மௌனத்திருவிழா.
26.08.2005 ஆவணி 10 வெள்ளி
கார்த்திகை விரதம்
விஷேடஉற்சவம்

**செப்ரெம்பர்**
22.09.2005 புரட்டாதி 6 வியாழன்
கார்த்திகை விரதம்
விசேட உற்சவம்

**ஒக்ரோபர்**
04.10.2005 புரட்டாதி 18 செவ்வாய்
நவராத்திரி விரத ஆரம்பம்
11.10.2005 புரட்டாதி 25 செவ்வாய்
சரஸ்வதி பூசை
12.10.2005 புரட்டாதி 26 புதன்
விஜயதசமி
19.10.2005 ஐப்பசி 2 புதன்
கார்த்திகை விரதம்
விசேடஉற்சவம்

**நவம்பர்**
01.11.2005 ஐப்பசி 15 செவ்வாய்
தீபாவளி
02.11.2005 ஐப்பசி 16 புதன்
கந்தசஷ்டி விரதஆரம்பம்
07.11.2005 ஐப்பசி 21 திங்கள்
கந்தசஷ்டி விரதம்
மாலை சூரசம்ஹாரம்
08.11.2005 ஐப்பசி 22 செவ்வாய்
தெய்வானை அம்மன்
திருக்கல்யாணம்.

16.11.2005 கார்த்திகை 1 புதன்
திருக்கார்த்திகை விரதம்
குமாராலய தீபம்
விசேடஉற்சவம்

**டிசம்பர்**
06.12.2005 கார்த்திகை 21 செவ்வாய்
விநாயகர் சஷ்டிவிரதம்
08.12.2005 கார்த்திகை 23 வியாழன்
திருவெம்பாவை பூஜாரம்பம்
11.12.2005 கார்த்திகை 26 ஞாயிறு
ஆண்டியப்பர் பூசை
13.12.2005 கார்த்திகை 28 புதன்
கார்த்திகை விரதம்
விசேட உற்சவம்
17.12.2005 மார்கழி 2 சனி
திருவாதிரை உற்சவம்

சுபமங்களம்

பதிவு இலக்கம்: Q.D./30/NEWS/2005